முக்கியமானதோர் விஷயமாகும். 1884-85ம் ஆண்டில் மீரட் ஹாஷிமி அச்சகத்தில் நான்கு பக்கங்களை கொண்ட சிறு பிரசுரமொன்று **'பத்வாயே மௌலூத் வ உரூஸ் வ கைரிஹி'** என்னும் பெயரில் வெளியிடப்பட்டது. அதில் சில்லறை பிரச்சினைகள் சிலவற்றை குறிப்பிட்டு விட்டு அவைகளை செய்யக் கூடாதென்றும் அவைகள் யூத, கிறிஸ்தவர்களின் நடைமுறைக்கு ஒப்பாக இருப்பதாகவும் கூறியிருந்தனர். இதனை சரிகண்டு ஒப்பமிட்ட ஐந்துபேரில் மூன்றுபேர் கைரெ முகல்லிதீன்களான வஹ்ஹாபிகள். மற்ற இருவர் தரீகத்துடைய உலமாக்களாக இருந்த ரஷீத் அஹ்மத் கங்கோஹியும், முஹம்மத் யஃகூப் நானூத்வியுமாகும். இவ்விருவரும் முரீதுகள் மட்டுமல்ல. கலீபாக்களும் கூட.

இனி அப்பிரசுரத்தில் செய்யக் கூடாதெனச் சொல்லப்பட்ட செயல்களை அவர் செய்யவில்லையா? அல்லது அவருடைய ஷெய்கு நாயகம் செய்யவில்லையா? அல்லது அவரது தரீக்கத்துடைய சகோதரர்களான காசிம் நானூத்வி, அஷ்ரப் அலி தானவி போன்ற்ோர் தான் செய்யவில்லையா? இந்த பத்வாவை எதிர்த்து அவர்களுடைய தரீகத்தின் சகோதரரும் மற்றொரு கலீபாவுமான முஹம்மத் அப்துஸ் ஸமீஃ என்பார் (இ-1320) **'அன்வாரே ஸாதிஆ'** என்னும் பெயரில் நூலொன்றை எழுதி வெளியிட்டார். அதன் பிரதியொன்றை தமது ஷெய்கு நாயகம் அவர்களிடம் காட்டிய போது அதில் கையாளப்பட்டிருந்த கடுமையான வாக்கியங்களை நீக்கி விடுமாறும் அதில் கூறப்பட்டுள்ள கருத்துக்களே எனது கருத்துமாகும் என்றும் கடிதமொன்றை எழுதி அனுப்பினர். இதன்படி 1890ம் ஆண்டு அந்தநூல் இரண்டாவது முறையாக அச்சிடப்பட்ட போது அவ்வுபதேசங்களின்படி பிரசுரிக்கப்பட்டது.

1885ல் வெளியிடப்பட்ட **'அன்வாருஸ் ஸாதிஆ'** என்னும் நூலுக்கு மௌலவி ரஷீத் அஹ்மத் கங்கோஹி **'அல் பராஹீனுஸ் ஸாதிஆ'** என்னும் பெயரில் மறுப்புரை நூலொன்றை எழுதினர். அதில் அல்லாஹ் ரஸூலை பற்றி மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகளை பிரயோகித்திருந்தார். இது 1887ம் ஆண்டு கலீல் அஹ்மத் அம்பேட்டியின் பெயராலேயே அச்சிடப்பட்டது. 'தஹ்தீருன்னாஸ்' என்னும் நூல் காசிம் நானூத்வியால் எழுதப்பட்டதாகும். இந்த சந்தர்ப்பத்தில் இவர்களுடைய ஷெய்கு நாயகம் அவர்கள்



மக்காவில் வாழ்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் 1859ம் ஆண்டு அப்புனித ஸ்தலத்திற்கு சென்றவர்கள் இறுதிவரை அங்கேயே வாழ்ந்து மறைந்தார்கள். இவர்கள் 1899-10-18 புதன்கிழமை இரவு இரண்டு மணிக்கு இவ்வுலகை நீத்தனர். அன்று பகல் ஜன்னத்துல் முஅல்லாவில் நல்லடக்கம் செய்யப்பட்டனர். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

நம்மால் மேலே சுட்டிக் காட்டப்பட்ட உலமாக்களுக்கு பலமுறை உபதேசம் செய்த அவர்களின் ஷெய்கவர்கள் இறுதியாக 19-7-1890 சனிக்கிழமை அன்று தமது கலீபாவாகிய ரஷீத் அஹ்மத் கங்கோஹிக்கு அவரது கருத்துக்களில் இருந்து வாபஸ் பெறுமாறு கடிதமொன்றை எழுதினர். இது 1977ல் மக்தூபாத் ஹிதாயாவில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதை அவர் ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக தாங்கள் விரும்பினால் தம்மை தங்களுடைய முரீதுகளின் பட்டியலிலிருந்து நீக்கி விடுமாறு சொல்லியிருந்தார். அத்துடன் இந்த உலமாக்களால் சொல்லப்பட்ட கருத்துக்கள் தவறானவை என்பதை ஆதாரப்படுத்தி **'பைஸலா ஹப்த் மஸ்அலா'** எனும் பிரசுரம் ஒன்றையும் இவரது ஷெய்கவர்கள் வெளியிட்டனர். இப்பிரசுரம் மௌலவி அஷ்ரப் அலி தானவியின் கரத்தால் ஷெய்கவர்கள் சொல்லச் சொல்ல எழுதப்பட்டதாகும். 24-1-1899ம் ஆண்டு கான்பூரைச் சேர்ந்த ஒருவர் இதுபற்றி கேட்டபோது இதனை ஒப்புக் கொண்டனர். இதிலும் அந்த உலமாக்களுக்கு உபதேசம் தான் செய்திருந்தார்களே அன்றி மார்க்கத் தீர்ப்பு எதையும் கொடுக்கவில்லை. இது உலமாக்களுக்குரிய செயலேயன்றி சூபிய்யாக்களுடையதல்ல.

தன்னுடைய ஷெய்கவர்களின் வார்த்தைக்கு மரியாதை கொடுத்து இவர்கள் எழுதிய தவறான கருத்துக்களிலிருந்து இவர்கள் தௌபா செய்திருப்பார்களாயின் 1316-1898ம் வருடம் உலமாக்களால் வழங்கப்பட்ட குப்ருடைய பத்வாவிலிருந்து தப்பித்திருப்பார்கள். என்ன செய்வது? அல்லாஹ் இவர்களைக் கொண்டு நன்மையை நாடவில்லை. அதனாலேயே இவர்கள் தமது பிடிவாதப் போக்கிலேயே இறுதிவரை இருந்து விட்டனர். அதே நேரம் இந்த உலமாக்களை குறித்து குப்ருடைய பத்வா வழங்கியவர்கள் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாபுக்கோ, இப்னு தைமிய்யாவுக்கோ ஏன் குப்ருடைய பத்வா கொடுக்கவில்லை?

கவாரிஜீன்கள், அஹ்லுல் கிப்லாவாசிகள், ராபிழிகள், ஷீஆக்கள் போன்றோரையும் இஸ்லாமிய அறிஞர் பெருமக்கள் ஏகமனதாக குப்ருடைய பத்வா கொடுத்ததாகத் தெரியவில்லை.

மேலும் இந்த உலமாக்களுக்கு குப்ருடைய பத்வா கொடுத்த பெரியார் அவர்கள் (பிறப்பு *10, ஷவ்வால் 1272 - 1856* மறைவு *25, ஸபர் 1304 - 1921*) இமாம் அஹ்மத் பின் ஹன்பல் ரழியல்லாஹு அன்ஹு அவர்களாலும் அஷ்ஷெய்கு அப்துல் காதிர் ஜீலானி ரழியல்லாஹு அன்ஹு அவர்களாலும் காபிரென்று சொல்லப்பட்ட யஸீதைக் கூட காபிரென்று சொல்லவில்லை.

இதுபோன்றே அஷ்ரப் அலி தானவியை காபிர் எனக்கூறி பத்வா கொடுத்த பெரியாருடைய ஷெய்காகிய மௌலானா ஸெய்யித் ஷாஹ் ஆலெ ரஸூல் மற்றும் அவர்களின் தந்தையான மௌலானா நகீ சாஹிபும் மௌலவி இஸ்மாயீல் தெஹ்லவியை காபிரென்று பத்வா கொடுத்தும் கூட அந்த பத்வாவை தாம் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் '**இமாமுத் தாயிபாவின் மீது நான் குப்ரை கொண்டு பத்வா கொடுக்க மாட்டேன்**' என்றும் மறுத்துவிட்டனர்.

ஆம். குப்ருடைய விஷயத்தில் மிகத் துல்லியமான நுணுக்கங்களை நாம் கையாளக் கடமைப்பட்டுள்ளோம். ஒருவர் குப்ருடைய பிரச்னையை ஏற்படுத்தும் பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார். அவரால் பிரயோகிக்கப்பட்ட வார்த்தைகள் 99 சதவிகிதம் குப்ரை ஆதரிப்பதாக இருந்து ஒரேயொரு சதவிகிதம் மட்டும் குப்ரை மறுப்பதாக இருக்குமாயின் அந்நிலையில் குப்ரைக் கொண்டு பத்வா கொடுக்கக் கூடாதென்பது தான் அறிஞர்களின் ஏகோபித்த கருத்தாகும். ஒருவர் இன்னொருவரை அல்லது ஒரு குழுவினர் இன்னொரு குழுவினரை காபிரெனத் தீர்ப்பளித்து விட்டால் உண்மையிலேயே அவர்கள் காபிர்கள் தானா? உதாரணமாக தன்னை நபி என்பதாக வாதித்த மீர்ஸா குலாம் அஹ்மத் காதியானியை (பிறப்பு *1256*, இறப்பு *1326*) பாகிஸ்தான் அரசு காபிரென்று கூறிற்று. இந்நிலையில் ஷியாக்கள், தேவ்பந்திகள், ஜமாஅத்தே இஸ்லாமிகள் என அனைவரும் காதியானியை காபிரென்று தான் கூறினர். அதன்பின் அவரது ஆதரவாளர்கள் இன்றும் ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றுகிறார்களே! இதற்கென்ன சொல்வது?



இன்னும் இந்த உலமாக்கள் மீது பத்வா கொடுத்தோரில் மக்கா முகர்ரமா மற்றும் மதீனா முனவ்வராவைச் சேர்ந்த அரேபிய அறிஞர்களும் உள்ளனர். அதில் ஒருவர் மக்கா முகர்ரமாவிலுள்ள ஜன்னத்துல் முஅல்லாவிலும் இன்னொருவர் மதீனா முனவ்வராவிலும் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதற்கும் என்ன சொல்வது?

மேலும் மௌலவி இஸ்மாயீல் தெஹ்லவி என்பார் ஷாஹ் வலியுல்லாஹ் முஹத்திஸ் தெஹ்லவி அவர்களின் புதல்வரான அஷ்ஷெய்கு அப்துல் கனீ அவர்களுக்கு *12-ரபீவுல் ஆகிர் 1193*ல் பிறந்தார். அஷ்ஷெய்கு அப்துல் அஸீஸ் முஹத்திஸ் தெஹ்லவி (*பி 1159- இ 1239*) அவர்களுடைய சகோதரரின் புதல்வராகும். தமது சிறிய தந்தைகளான அஷ்ஷெய்கு அப்துல்காதிர், அஷ்ஷெய்கு ரபீவுத்தீன், அஷ்ஷெய்கு அப்துல் அஸீஸ் ஆகியோரிடம் கல்வி கற்றார். அதன்பின் ஸெய்யித் அஹ்மத் ரேபரேலி என்பாரிடம் பைஅத்துப் பெற்று ஹிஜ்ரி *1237*ல் அவருடன் ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றுவதற்காக சென்றார். பின்னர் 'தக்வியத்துல் ஈமான்' என்னும் பெயரில் அரபு நூலொன்றுக்கு மொழி பெயர்ப்புச் செய்தார்.

இதைக்கண்ட அவரது சிறிய தந்தை அஷ்ஷெய்கு அப்துல் அஸீஸ் அவர்களும் அவருடைய மாணவர்களும் அவரை கடுமையாக எதிர்த்தனர். அப்போது அவரது சிறிய தந்தை தமது கண் பார்வையை இழந்திருந்தனர். அதுபோது அவர் நான் ஆரோக்கியமானவனாக மட்டுமிருந்தால் ஷியாக்களுக்கு எதிராக '**துஹ்பா இஸ்னா அஷரிய்யா**' எனும் நூலை எழுதியது போல இதற்கும் மறுப்புரை எழுதியிருப்பேன் எனக் கூறினர். எனினும் அஷ்ஷெய்கு மக்ஸூஸுல்லாஹ், அஷ்ஷெய்கு முஹம்மத் மூஸா, அஷ்ஷெய்கு ரஷீதுத்தீன், அஷ்ஷெய்கு பழ்லுல்ஹக் ஆகியோர் *19-ரபீவுல் ஆகிர் 1240* புதன்கிழமை காலை தில்லி ஜாமிஆ மஸ்ஜிதில் இஸ்மாயீல் தெஹ்லவியோடு விவாதம் நடத்தினர். அதில் அவர் பதில்சொல்ல முடியாமல் திண்டாடினார். அதன் பிறகும் அவர் திருந்தவில்லை. அதன்பின் அவருடைய கருத்துக்களை பொய்யாதெனக் கூறி அஷ்ஷெய்கு மக்ஸூஸுல்லாஹ் அவர்கள் '**முயீதுல் ஈமான்**' என்னும் நூலையும் அல்லாமா பழ்லுல்ஹக் அவர்கள் '**தஹ்கீகுல் பத்வா ஃபீ இப்தாலித் தக்வா**'

என்னும் நூலையும் தொகுத்தனர். இதில் தக்வியத்துல் ஈமான் என்னும் நூலை அபுல் ஹஸன் நத்வி என்பார் மௌலவி முஹம்மத் ஸகரிய்யா காந்தல்வி என்பாரின் கட்டளைக்கொப்ப 'ரிஸாலத்துத் தௌஹீத்' என்னும் பெயரில் அரபி மொழியில் எழுதி லக்னோ நத்வத்துல் உலமா அச்சகத்தில் முதன் முறையாக ஹிஜ்ரி 1394ல் பிரசுரித்து வெளிட்டார்.

இதில் ஷெய்கு இப்னு தைமிய்யா என்பவர் ஓர் அறிஞரின் வாரிசாக இருந்தவர். இவரது நூல்களை ஆய்வுசெய்த முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாபும் அறிஞரின் வாரிசேயாகும். இவருடைய நூலை மொழியாக்கம் செய்த இஸ்மாயீல் தெஹ்லவியும் அறிஞரின் வாரிசாகத்தான் இருந்தார். இந்நிலையில் ஒவ்வொருவரும் தத்தம் தமது பிடிவாதம் மற்றும் அகங்காரத்தின் காரணமாகவே நல்லோரின் கருத்துக்களை ஏற்க மறுத்து அவர்களை புறக்கணித்து நடந்ததே இன்று நாம் துண்டாடப் பட்டுப் போய் பிளவுபட்டு நிற்பதற்குரிய காரணமென்று சொன்னால் மிகையாகாது.

ஆதலால் இதுவரை மேலே எடுத்துக் காட்டப்பட்ட உலமாக் களுக்கும் நமக்கும் எந்தத் தொடர்புமில்லை. அவர்களை ஆதரிப்பதாலோ அல்லது எதிர்ப்பதாலோ எந்த விதமான லாபமுமில்லை. அவர்களனைவரும் மமதை கொண்டவர்களாக இருந்துள்ளனர் என்பது அவர்களின் செயல்பாடுகளைக் கொண்டு நம்மால் அனுமானிக்க முடிகிறது. ஆதலால் இப்படிப்பட்டோரின் சகவாசம் நம் பேன்றோருக்குத் தேவைதானா?

மேலும் இந்த இடத்தில் நாம் கைகொடுத்து நம்மை அர்ப்பணித்து விட்ட நமது நாதாக்களான நல்லோர்களால் சுட்டிக்காட்டப்பட்ட மேற்கண்ட உலமாக்களை பற்றிய சில கருத்துக்களையும் உங்களின் பார்வைக்குத் தருவது சிறந்ததெனக் கருதுகிறோம். எங்களின் ஷெய்குமார்களின் வரிசையில் ஐந்தாவது இடத்தை வகித்துக் கொண்டிருக்கும் பெரியாராகிய பக்ருல் ஆரிபீன் குத்புல் ஆமிலீன் சுல்தானுல் காமிலீன் எனப் போற்றப் படும் அஷ்ஷாஹ் அப்துல்ஹை சாட்காமீ கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ் அவர்கள் ஆறாவது இடத்தை வகிக்கும் சுல்தானுல் ஆரிபீன் அல் பானீ பிஸ்ஸாதிஸ் ஸுப்ஹானி



ஹழ்ரத் அஷ்ஷாஹ் முக்லிஸுர் ரஹ்மான் ஜஹாங்கீரி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் புதல்வராகும்.

ஜஹாங்கீரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஹிஜ்ரி 1229ல் பிறந்து எழுபத்தி மூன்று ஆண்டுகள் இவ்வவனியில் வாழ்ந்து ஹிஜ்ரி 1302ல் இறையடி சேர்ந்தவர்கள். இவர்கள் சுன்னத் வல் ஜமாஅத்தினரின் கொள்கையை வலுப்படுத்துவதற்காக இஸ்லாமிய நல்லுலகுக்கு அவர்களால் எழுதப்பட்ட நூல்களில் மௌலவி இஸ்மாயீல் தெஹ்லவியின் தக்வியத்துல் ஈமான் என்னும் தீய கொள்கைக்குரிய நூலுக்கு மறுப்பாக எழுதப்பட்ட நூல் முக்கியமான ஒன்றாகும். பக்ருல் ஆரிபீன் ஸெய்யிதுனா அப்துல்ஹை ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஹிஜ்ரி 1276ல் பிறந்து 1339ல் இறையடி சேர்ந்தவர்களாகும். ஹழ்ரத் கிப்லா அவர்கள் புனித ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றுவதற்காக மக்காவுக்கு சென்றிருந்த போது புனித ஹரம் ஷரீபில் வைத்து ஹழ்ரத் ஸெய்யிதுனா இம்தாதுல்லாஹ் முஹாஜிர் மக்கீ ரஹிமஹுல்லாஹ் அவர்களை சந்தித்து ஸாபிரிய்யா நிழாமிய்யா தரீக்காக்களுக்குரிய இஜாஸாவை பெற்றார்கள். நாம் கண்ட புனிதர்களில் அஷ்ஷாஹ் முஹிப்புல்லாஹ் ஸாஹிப் அவர்களும் அஷ்ஷாஹ் இம்தாதுல்லாஹ் முஹாஜிர் மக்கீ ரஹிமஹுமல்லாஹ் அவர்களும் மிக முக்கியத்துவம் வாய்ந்தவர்களாகும். எனது மரியாதைக்குரிய தந்தை அவர்களிடம் நான் பைஅத்துப் பெற்றிருக்காவிட்டால் இவ்விருவரில் ஒருவரிடம் தான் நான் முரீதாகி இருப்பேனென்றும் கூறியுள்ளார்கள்.

எனது ஷெய்கவர்கள் முஜ்தஹிதாகும் முஹக்கிகாகும் முஜத்திதாகும் என்றெல்லாம் போற்றிப் புகழும் மௌலவி அஷ்ரப் அலி அவர்களிடம் ஹழ்ரத் பக்ருல் ஆரிபீன் அவர்கள், நீங்கள் உங்களுடைய ஷெய்குக்கு மாற்றமாக பிறகு ஏன் செயல்படுகிறீர்கள்? எனக் கேட்டபோது, அவர்களை நாம் தரீகத்தில் பின்பற்றுகிறோம். ஷரீஅத்திலல்ல எனக் கூறியதாக 'ஸீரத் பக்ருல் ஆரிபீன் 3-188ல்' கூறப்பட்டுள்ளது. இதனை தமது முரீதுகளிடம் விபரித்த ஹழ்ரத் அவர்கள் மௌலவி அஷ்ரப் அலி அவர்கள் தமது காமிலான ஷெய்கின் சொல்லுக்கு மாறு செய்தது மட்டுமின்றி ஷெய்கவர்கள் ஷரீஅத்திற்கு மாற்றமான காரியங்களை செய்தவர்களென்றும் கூறுகிறார். இவர் அல்லாஹ்

மற்றும் அவனது ரஸூலின் மீது கொஞ்சமும் அச்சமில்லாதவர். நல்லோரை மதிக்கத் தெரியாத மரியாதை கெட்டவர். இவர் மௌலவி இஸ்மாயீல் தெஹ்லவியின் தீய கொள்கையை சார்ந்தவராகவும் இருக்கிறார்.

இனி ஷெய்கு எனப்படுபவர் நபிகள் நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பிரதிநிதியாகச் செயல்படுபவராகும். இந்நிலையில் நபியவர்களுக்கு மாற்றம் செய்தவன் காபிராகும். இதில் மௌலவி அஷ்ரப் அலி அவர்களின் இதயம் முற்றிலுமாகச் செத்திறந்து போய் விட்டதென்று தான் சொல்ல வேண்டும். இவர் தரீகத்தின் அடிப்படையில் மதம் மாறியவராகும். இத்தனைக்குப் பிறகும் இன்னோர் தம்மை நேரான வழியில் இருப்பதாக எண்ணிக் கொண்டனர். ஆம். எல்லோருமே அவரவர் வழியே நேரானதென்றும், அவரவர்களின் கருத்துக்களே சரியானதென்றும் பிரச்சாரம் செய்வதுண்டு. அதற்கு நாமென்ன செய்ய முடியும்?

இஸ்லாத்தின் இனிய கீற்றுக்களே! சுன்னத் வல் ஜமாஅத்தினர் செய்துவரும் காரியங்கள் உங்களுக்கு ஒருவேளை பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் அவைகள் உண்மையில் ஷரீஅத்திற்கு மாற்றமானவைகளல்ல என்பது நீங்கள் அறிந்ததே. உதாரணமாக நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களது ஜனன தினத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இந்தநாள் நினைவு கூறப்படுவதை மறுப்பவர் ஒருவர்கூட இல்லை. இதை அஷ்ரப் அலி தானவியும் மறுக்கவில்லை. அவரது கூட்டத்தாரும் மறுக்கவில்லை. அந்த நாளை நினைவு கூர்வதற்காக நாம் கையாளும் முறையைத் தான் அவர் ஆட்சேபித்தார். தாங்கள் வஹ்ஹாபிகளல்ல எனக் கூறும் இவரும் இவருடைய தோழர்களும் இன்றும் கூட ஜனன விழாவை ஆட்சேபிக்கத்தான் செய்கின்றனர். இவ்வாறே வஹ்ஹாபிகளும் இதை ஆட்சேபிக்கின்றனர்.

காரணம் யூத கிறிஸ்தவர்களின் செயலுக்கு ஒப்பாக இருக்கிறதென்பது அதற்கிவர்கள் சொல்லும் காரணமாகும். உணவை உண்ணும் ஒருவர் மேசையில் அமர்ந்து கரண்டியால் உண்ணுவாராயின் அவரை யூத, கிறிஸ்தவர்களுக்கு ஒப்பாக செயல்



படுபவரென்று சொல்ல முடியுமா? பின்னும் இதோர் மக்ரூஹான செயலென்றே வைத்துக் கொண்டாலும் இதனால் அவர் முஷ்ரிக்காகி விடுவாரா? அல்லது பாவம் செய்தவராகக் கருதப்படுவாரா? நிச்சயமாக இல்லையென்று தான் சொல்லப்படும். ஆனால் அதே நேரம் அவர்களிடமுள்ள அகீதா என்னும் கொள்கை விளக்கமும் அவர்களால் எழுதப்பட்ட விஷயங்களும் தான் உண்மையில் ஷிர்க்கை ஏற்படுத்தக் கூடிய, பாவத்தை வருவிக்கக் கூடிய கருத்துக்களாக இருக்கின்றன. இத்தனைக்குப் பிறகும் அவர்களையே நீங்கள் ஏன் பின்பற்றிக் கொண்டிருக்கிறீர்கள்?

கடந்த காலங்களில் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நாம் விழிப்பிலும் காணலாம். அதற்கு ஆதாரமாக நமது முன்னோர்கள் இருந்துள்ளனர் என்னும் கருத்தை 'வெற்றி' என்னும் மாத சஞ்சிகையில் நாம் எடுத்துக் காட்டியபோது, ஜனவரி 2003ல் வெளியான வஹ்ஹாபிகளின் மாத சஞ்சிகையான 'அல் ஹஸனாத்'தில் அபு முஸ்அப் என்பார், நாம் '**வஹ்தத்துல் உஜூத்**' என்னும் கொள்கையை பேசுவதாகவும் அதனை எதிர்த்துக் குரல் கொடுக்கும் விஷயத்தில், பெயரால் மாறுபட்டிருந்தாலும் கொள்கை விஷயத்தில் ஒருங்கிணைந்தோரின் பட்டியலில் மௌலவி அஷ்ரப் அலி தானவியை ஆதரிக்கும் இயக்கத்தையும் சேர்த்து எழுதியிருந்தார். இதில் இவர்களுடைய விளக்கமும் வஹ்ஹாபிகளுடைய விளக்கமும் ஒன்றல்ல என்றிருந்தால் இதற்கு ஏன் பதிலளிக்காது மௌனம் சாதித்தனர்? பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டும் வேலையை எத்தனை காலத்திற்குத் தான் தொடரப் போகிறீர்கள்? அல்லாஹ் ரஸூலுக்காக இப்படிப்பட்ட கீழ்த்தரமான காரியங்களை விட்டும் ஒதுங்கி நல்லோர்களான நாதாக்களுடன் இணைய வேண்டுமென தயவோடு உங்களை நாம் அழைக்கிறோம்.

அடுத்து ஷெய்கு ஷிஹாபுத்தீன் ஸுஹ்ரவர்தி ரஹிமஹுல்லாஹ் அவர்கள், அவாரிபுல் மஆரிப் என்னும் நூலில் பெரும்பாலான ஷெய்குமார்களால் சொல்லக்கேட்ட தகவல் ஒன்றை பதிவு செய்துள்ளனர். அதாவது, "**வெற்றியடைந்த உத்தமப் பெருமக்களை தரிசிக்காதவன் ஜெயம் பெறவே மாட்டான். இன்னும் ஷெய்கு இல்லாதவனுக்கு ஷைத்தான் தான் ஷெய்காக இருப்பான் என ஹழ்ரத் அபு யஸீதுல் பிஸ்தாமி ரழியல்லாஹு**

**அன்ஹு அவர்களின் சொல்லேயும், இமாம் குஷைரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஷெய்கு இல்லாதவன் வெற்றிபெற முடியாது"** எனக்கூறிய கருத்தையும் பதிவு செய்துள்ளார்கள். ஆதலால் இந்த நூற்றுண்டை பொறுத்தவரை ஒரு ஷெய்குடைய கரத்தை பற்றிப்பிடிக்க நீங்கள் முன் வரவேண்டும்.

உள்ளத்தை பக்குவப்படுத்தும் மகத்தான நல்லோர்கள் தற்போது இல்லேயென்னும் கருத்து மிக மிகத் தவறுனது என்பதை நாம் முன்னுல் சுட்டிக் காட்டி உள்ளோம். இப்படிப் பட்ட எண்ணம் தேக வியாதிகளுக்கான மருந்தும் அவைகளுக்குரிய மருத்துவர்களும் தற்காலத்தில் தான் இருக்கிறுர்களே அன்றி முற்காலத்தில் இருக்கவில்லே என்று சொல்வதைப் போலுள்ளது. ஆம். பரிகாரமும் பரிகாரங்களுக்குரிய முறைகளும் தான் ஒவ்வொரு காலக் கட்டத்திலும் மாறுபட்டதே தவிர மருந்தோ மருத்துவரோ எல்லா காலக்கட்டங்களிலும் இருக்கத் தான் செய்கின்றனர் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதேபோல மனிதன் தோன்றியதிலிருந்து இன்றுவரை அவனுல் பயன்படுத்தப்படும் வாகனங்கள் தான் மாறிக் கொண்டுள்ளதே அன்றி வாகனங்களே இல்லேயென்று சொன்னுல் எப்படி?

அடுத்து இரண்டு ஷெய்குமார்களின் கரத்தை பற்றிய எந்தவொரு முரீதும் தமது லட்சியத்தில் வெற்றிபெற்று கரை சேர்ந்ததாக வரலாறே இல்லே. ஆதலால் பூரணத்துவத்தை பெற்று தஸவ்வுபுக்குரிய பாதையில் ஈடேற்றமடைய விரும்பும் ஒருவர் ஒரேயொரு ஷெய்கின் கரத்தை பிடித்து ஒழுக வேண்டும் என அல்லாமா அப்துல் வஹ்ஹாப் ஷ:ருனி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுவதால் காமிலான ஒரு ஷெய்கின் கரத்தை பற்றி வாழ முயலுங்கள். ஆம். உனது தேகத்திற்கு எவ்வாறு ஒரேயொரு தந்தை மட்டும் தான் இருக்க முடியுமோ, அவ்வாறு உனது ஆத்மாவுக்கும் ஒரேயொரு தந்தையை மட்டும் தேடிக் கொள். அருளேநாடி பலரிடமும் பைஅத்துச் செய்து கொள்வதில் தவறேதுமில்லே என்ற போதிலும் உனக்கென்று ஒரு தந்தை இருக்கிறுர். உனக்குத் தேவையானதை அவரிடம் கேட்டுப் பெறுவதற்குரிய உரிமை உனக்கு இருக்கும்போது அடுத்தவரிடம் கை நீட்டினுல் உண்மையான தந்தை அதை எப்படி சகித்துக் கொள்வார் என்பதையும் நீ கொஞ்சம் சிந்தித்துப்பார்.



இதில் காமிலான முர்ஷித் என்பவர் கண்ணுடியைப் போன்றவராகும். அவரில் உனது உருவம், உனது எண்ணமே பிரதிபலிக்கும். இதை நீ புரிந்துகொள்ள வில்லேயெனில் ஷெய்கையே தவறுகப் புரிந்து முடிவில் அழிந்து போவாய். இந்நிலேயில் அல்லாஹுதஆலாவின் திருப்தி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு பைஅத்துச் செய்யப்பட வேண்டுமேயன்றி அவரிடம் காணப்படும் கராமத்தைக் கண்டு அல்ல.

## கராமத் :-

ஏனெனில் கராமத் என்பது பல வகைப்படும். குர்ஆனேயும் சுன்னத்தையும் முழுமையாகப் பின்பற்றி வாழ்பவருக்கு இந்த கராமத் என்பது ஒரு சன்மானமாகும். இந்நிலேயில் ஒருவருக்கு ஏதேனும் கராமத் நிகழ்ந்து விட்டால் அதனே ஷரீஅத்தின் வரையறையோடு ஒப்பிட்டு உரசிப் பார்க்க வேண்டும். அதற்கு பிறகும் ஷரீஅத்துடைய விஷயத்தில் உனக்குள் மாற்றம் ஏதும் ஏற்படாது இருக்குமாயின் அது அல்லாஹ் உனக்களித்த நன்கொடையாகும். அவ்வாறின்றி ஷரீஅத்திற்குரிய விஷயத்தில் பொடுபோக்கை காணுவாயாகில் அதோர் சூழ்ச்சி எனக்கருதி அதற்காக அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேட வேண்டும். இனி கராமத்தை பொய்யாக்குவோர் அல் உஸ்தாத் அபு இஸ்ஹாக் அல் அஸ்பரீனி ரஹிமஹுல்லாஹ் அவர்களே தமது கூற்றுக்கு ஆதாரமாக்க முயலுகின்றனர். ஆனுல் இவர் சுன்னத் வல் ஜமாஅத்தின் ஸ்தூபிகளில் மிகப்பெரும் தூணுகும். இதைப்பற்றி இமாம் தாஜுத்தீன் சுப்கி ரஹிமஹுல்லாஹ் அவர்கள்,...

**"ஹழ்ரத் அபு இஸ்ஹாக் அல் அஸ்பரீனி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கராமத்தை மறுப்பவர்களென அவர்கள் கூறியதாகச் சொல்லப்படுவது அவர்கள்மீது சுமத்தப்பட்ட வீண் பழியாகும். மேலும் இமாமுல் ஹரமைன் அல் ஜுவைனி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் 'முக்தஸருத் தக்ரீபு வல் இர்ஷாத்' என்னும் நூலில், "இமாமவர்கள் அவ்வாறு கூறியிருக்க மாட்டார்கள்"** என்றும் குறிப்பிடுகின்றனர். நூல் : அல் கவாகிபுஸ் ஸாஹிரு, பக்கம் : 89, 90. இனி இவர்களால் சுமத்தப்படும் பழி உண்மையெனில் அதற்குரிய விளக்கத்தை அல்லாமா மனுவி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தபகாத்துஸ் ஸூபிய்யா என்னும் நூலின் பாகம்-1, பக்கம்-6ல் பதில் தருகின்றனர்.

கராமத் என்பது உலக நியதியின் நடைமுறைக்கு மாற்றமானதொரு செயலாகும். மேலும் அவை மனித சிந்தனைக்கு எட்டாத ஆச்சரியமான விஷயமுமாகும். அத்துடன் ஒரு கராமத்தை சுட்டிக்காட்டி இதை நம்ப முடியவில்லை. இப்படியும் நடக்குமா என்ன? இதனை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை எனக்கூறி மறுப்பதற்கு யாருக்கும் உரிமையில்லை. இதேபோல கராமத் என்பது வாலிபத்திலோ அல்லது வயோதிகத்திலோ தான் நிகழ முடியுமேயன்றி குழந்தை பருவத்தில் அது நிகழ முடியாது எனக் கூறுவதற்கும் யாருக்கும் அதிகாரமில்லை. அவ்வாறாயின் குத்புல் அக்தாப் கௌஸுல் அஃழம் ஷெய்குல் மஷாயிக் அல் குத்புர் ரப்பானி வல் கௌஸுஸ் ஸமதானி அஷ்ஷெய்கு அப்துல்காதிர் ஜீலானி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தாம் பிறந்தபோது தமது தாயின் மடியில் புனித ரமழான் மாதத் தலைப்பிறை அன்று பாலருந்தவில்லை எனும் கூற்றை நம்மில் ஒருசிலர் ஏற்க மறுப்பது வியப்பாக இருக்கிறது.

குழந்தை பருவத்தில் கராமத் நிகழ்வதில்லையாதலால் கௌஸுல் அஃழம் அவர்கள் குழந்தை பருவத்தில் நிகழ்த்திக் காட்டிய அற்புதத்தை ஏற்க முடியாதென வாதிப்போர் புகாரி ஷரீப் கிதாபு அஹாதீஸில் அன்பியாயி என்னும் பிரிவில் கூறப்பட்டுள்ள நபிமொழிக்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? ஹதீஸைப் பாருங்கள்,...

وكانت إمرأة ترضع إبنا لها من بنى اسرائيل فمر بها رجل راكب ذو شارة، فقالت : اللهم إجعل إبني مثله، فترك ثديها واقبل على الراكب، فقال : اللهم لا تجعلني مثله، ثم اقبل على ثديها يمصه. ثم مر بأمة فقالت : اللهم لا تجعل إبنى مثل هذه، فترك ثديها، فقال : اللهم اجعلني مثلها، فقالت : لم ذاك؟ فقال : الراكب جبار من الجبابرة. وهذه الأمة، يقولون : سرقت، زنيت، ولم تفعل.

"முற்காலத்தில் வாழ்ந்த பெண் ஒருவர் தமது குழந்தைக்கு பாலூட்டிக் கொண்டிருக்கும் போது அவ்வழியாக சென்ற மாவீரன் ஒருவனை கண்டதும், யா அல்லாஹ்! எனது குழந்தையை இவரைப் போலாக்கி வைப்பாயாக என்று பிரார்த்திக்க, பாலருந்திக் கொண்டிருந்த அக்குழந்தை இவனைப் போல என்னை ஆக்கிவிடாதே என்று வாய் திறந்து பேசிற்று. பின்னர் விபச்சாரி திருடி எனக் குற்றஞ் சாட்டப்பட்ட பெண்ணொருத்தியை கண்ட போது, இவளைப் போன்று என் குழந்தையை ஆக்கிவிடாதே என்று பிரார்த்திக்க, அதற்கந்த குழந்தை இவளைப் போல் என்னை ஆக்கிவை என்று கூறியதாக அருமை நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கூறும் வார்த்தைக்கு என்ன பதில்" தருவார்கள்?



குழந்தை பருவத்தில் முற்காலத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை ஏற்கலாம் எனில் கௌஸுல் அஃழம் அவர்களின் வாயிலாக நிகழ்ந்த அற்புதத்தை மட்டும் ஏன் ஏற்க முடியாது? முற்காலத்தில் ஒரு விபச்சாரிக்குப் பிறந்த பாலருந்தும் குழந்தையும் தனது வாய் திறந்து பேசியதாக நபியவர்களால் சொல்லப்படும் நபிமொழியை அது ஒரு கராமத்தென்று சொல்ல முடியாவிட்டாலும் விபச்சாரத்தில் பிறந்த குழந்தை பேசியது ஆச்சரியமான அதிசயமான நமது அறிவுக்கு விளங்காத ஒன்றாக இருந்தும் அதை நாம் ஏற்றுக் கொள்கிறோமெனில் அண்ணலெங் கோமானின் பரிசுத்தமான குடும்பத்தை சார்ந்த வலிமார்களுக்கெல்லாம் அரசரெனப் போற்றப்படும் அந்த உத்தமர் அன்று பேசவில்லை என்றாலும் புனிதத்திற்குரிய அந்நாளன்று பாலருந்தவில்லை என்பதை மட்டும் ஏன் ஏற்க முடியாது?

மேலும் பருவ வயதை அடைந்த பின்னர் தான் ஒருவர் விலாயத்திற்குரியவராக மாறுகிறார் என்பதால் குழந்தை பருவத்தில் கராமத் நிகழ்வதற்குரிய சாத்தியமில்லை எனக்கூறி மறுப்பதற்கு இவர்கள் குழந்தை பருவத்தை தான் ஆதாரமாக முன் வைக்கின்றனர். இது எப்படி இருக்கிறதெனில் பருவ வயதை அடைந்த பின்னர்தான் ஒருவர் நபியாக முடியும். நபித்துவத்திற்குப் பிறகுதான் அவருக்குள் முஃஜிஸாத் நிகழ முடியும் என்று சொல்வதை போலிருக்கிறது. இது வஹ்ஹாபியத்தின் விஷந்தோய்ந்த நச்சுக் கருத்தல்லவா! ஆனால் நபிமார்கள் தமது தாயின் வயிற்றிலிருக்கும் போதே முஃஜிஸாவை நிகழ்த்திக் காட்டியுள்ளனர். எப்படித் தெரியுமா?

ஸெய்யிதத்துனா மர்யம் அலைஹஸ்ஸலாமவர்கள் ஒருநாள் தமது சகோதரியை சந்தித்தனர். அதுபோது அவர், நான் கர்ப்ப

முற்றிருப்பதாக உணருகிறேன் என்றுசொல்ல, அதைக்கேட்ட அவர்கள் நானும் அவ்வாறு இருப்பதாகத் தான் உணருகிறேன் என்றுசொல்லி ஒருவரையொருவர் கட்டித்தழுவி ஆலிங்கணம் செய்து கொண்டனர். அதுபோது சகோதரி அவர்கள்,...

انی أری ما في بطني يسجد لما في بطنك.

**"நிச்சயமாக எனது வயிற்றிலிருக்கும் சிசு உமது வயிற்றிலி ருக்கும் சிசுவுக்கு ஸுஜூத் - மரியாதை செய்வதை பார்க்கிறேன்"** என்றுசொல்ல, அதைக்கேட்ட மர்யம் அலைஹஸ்ஸலாமவர்கள்,...

كنت اذا خلوت حدثني وكلمني واذا كنت فى الناس سبح في بطني.

**"நான் தனியாக இருந்தால் என்னோடு பேசுவதாகவும், கூட்டத்தினர் மத்தியில் இருந்தால் எனது வயிற்றில் தஸ்பீஹ் செய்வதையும் நான் உணருகிறேன் என்றனர்"**

நூல் : அல்பிதாயா வந்நிஹாயா, 2-65.

முற்கால நபிமார்கள் செய்த அற்புதங்களெல்லாம் வல்லோனும் அல்லாஹ் தனது ஹபீபாகிய நமது உயிருக்குள் உயிராக உறைந்துள்ள ஆகாவாகிய அண்ணலெங் கோமான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக் கொண்டு மனித சமுதாயத்திற்கு வழங்கிச் சிறப்பித்தவைகளாக இருக்கும்போது கௌஸுல் அஃழம் அவர்களின் மூலமாக அல்லாஹ் நமக்கு வெளிப்படுத்திக் காட்டிய அற்புதத்தை மட்டும் நாம் ஏற்க மறுக்கிறோம் எனில் இதை என்னவென்று சொல்வது? பின்னும் குழந்தைகளில் நபிமார்களாக இருந்த வர்கள் ஹழ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் மற்றும் ஹழ்ரத் யஹ்யா அலைஹிஸ்ஸலாம் ஆகிய இருவருமேயாகும். அதே நேரம் இவர்களை தமது வயிற்றில் சுமந்து கொண்டிருந்தவர்கள் நபிமார்களல்ல. மாறாக அவர்கள் கண்டிப்பாக வலிமார்கள் தான். இந்நிலையில் முந்தைய காலத்தை சேர்ந்த அப்பெண்களால் தமது வயிற்றிலிருந்த குழந்தைகளின் செயல்களை உணர முடிந்த தெனில் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர் களது உம்மத்துக்களிலுள்ள வலிமார்களின் படித்தரம் எவ்வாறு இருக்குமென்பதை ஒருகணம் யோசித்துப் பாருங்கள்.

இனி கராமத் என்பதே இல்லையென ஏற்க மறுப்பதானது



குர்ஆனையும் ஹதீஸையும் மறுப்பதாகவே அமைந்து விடுமா தலால் இது குப்ரிய்யத்தாகும். அல்லாஹுதஆலா தனது நபிமார் களுக்கு வழங்கிய முஃஜிஸாக்கள் தான் வலிமார்களில் கராமத் துக்கள் என்னும் பெயரில் வெளிப்படுகின்றன. இதில் ஒன்றை யொன்று முந்தாதிருப்பதே இதில் பார்க்கப்படும் வித்தியாச மாகும். இந்நிலையில் கராமத்தை பொய்ப்பிப்பவர்கள் என்போர் பல தரப்படுகின்றனர். இதில் முற்றிலுமாக கராமத்தை மறுப்போர் ஒருவகை. முன்னோர்களான ஹழ்ரத் ஜுனைதுல் பக்தாதி, ஹழ்ரத் மஃரூபுல் கர்கீ, ஹழ்ரத் சிர்ரிஸ் ஸிக்தி, ஹழ்ரத் இப்ராஹீம் பின் அத்ஹம் ரழியல்லாஹு அன்ஹும் போன்ற நன்மக்களின் கராமத்துக்களை ஏற்கும் அதேநேரம் தற்காலத்திய வலிமார்களின் கரமத்துக்களை மறுப்போர் இரண்டாம் வகை. இவர்கள் ஹழ்ரத் ஸெய்யிதுனா மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களை ஏற்றுக்கொண்டு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை பொய்ப்பிப் பவரைப் போன்றவர்களாகும் என்கின்றனர் அஷ்ஷெய்கு அபுல் ஹஸன் அஷ்ஷாதுலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள். இதே கருத்து தபகாத்துஸ் ஸூபிய்யா 1-20லும் ரௌழுர் ரயாஹீன் பக்கம்-42லும் கூறப்பட்டுள்ளது. இனி கராமத் இருப்பதாக ஏற்றுக் கொள்ளும் வேறுசிலர் தற்காலத்தில் இன்னார் மீது கராமத் நிகழ்ந்ததென்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இவர்களை மேற்கண்ட பெரியார், நற்பேறு அற்றவர்களெனக் கூறுகின்றனர்.

ஹழ்ரத் பாயஸீத் பிஸ்தாமி ரஹிமஹுல்லாஹ் அவர்க ளிடம், இன்னார் ஒவ்வோர் இரவும் மக்காவுக்குச் சென்று வருவதாகக் கூறுகிறாரென்று சொன்னபோது, அதற்கவர்கள்; ஷைத்தான் ஒவ்வொரு வினாடியும் கிழக்கிலிருந்து மேற்குவரை சென்று வருவதாகச் சொன்னார்கள். அதன்பின் இன்னார் நீரின்மேல் நடப்பதாகச் சொன்னபோது, அதற்கவர்கள்; மீன்கள் நீரில் வாழ்வதும் பறவைகள் ஆகாயத்தில் பறப்பதும் அதைவிட ஆச்சரியமானதென்று கூறினர். பின்னும் அப்தால்களில் ஒருவர் ஜும்ஆவுக்குச் செல்வதில்லையென சொல்லப்பட்ட போது சூபிய்யாக்கள் பித்அத்திகளல்ல என்றும் கூறினர். அப்தால்கள் எனப்படுவோர் ஒரே நேரத்தில் பல இடங்களில் சஞ்சரிப்பவர்க ளாகும். அதற்காக வீட்டிலிருந்து கொண்டே ஜும்ஆவுக்கு செல்லாமலிருப்பதை ஏற்க வேண்டுமானால் நம்மில் அந்த

நன்மக்களை பலர் பல இடங்களில் தொழுகக் கண்டதாகவும் அவர்கள் ஊரிலிருக்க ஹரம் ஷரீபில் பார்த்ததாகவும் முரீதீன்களால் சொல்லப்பட்டிருக்க வேண்டும்.

மிக நீண்ட தூரத்தை நொடிப் பொழுதில் கடப்பதும், நீரின் மேல் நடப்பதும், ஆகாயத்தில் பறப்பதும், எதிர்காலத்தில் நடக்கப் போகின்றவைகளை சொல்வதும் போன்ற இவைகளெல்லாம் கராமத்துக்கள் தானென்றிருந்தாலும் கூட அல்லாஹ்வை அஞ்சி அவனுக்கு தன்னை முற்றிலுமாக அர்ப்பணித்து அவனது ஏவல்களை எடுத்து நடப்பதும் அவனால் தடை செய்யப்பட்டவைகளை விட்டு விலகி நடப்பதும் தான் இப்படிப்பட்ட நல்லோர்களிடம் மிகப்பெரும் கராமத்தாகும் என்பதாக ஷெய்கு தாஜுத்தீன் பின் அதாவுல்லாஹ் ரஹிமஹுல்லாஹ் என்பார் கூறுகின்றனர்.

ஷரீஅத்தின் சட்டதிட்டங்களில் பொடுபோக்காக செயல்படும் ஒருவர் ஆகாயத்தில் பறப்பதைக் கண்டாலும் நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம் என்பதாக ஹழ்ரத் பாயஸீதுல் பிஸ்தாமி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் எச்சரிக்கையை உள்ளத்தில் பதித்துக் கொள்ளுங்கள்.

ஹழ்ரத் ஷிப்லி ரஹிமஹுல்லாஹ் அவர்களை மிகப்பெரும் வலியெனக் கேள்விப்பட்ட ஒருவர், அவர்களை சந்திப்பதற்காக சென்றார். அவர் அங்கே சென்று மூன்று நாட்கள்வரை தங்கியிருந்து விட்டு அதன்பின் விடைபெற்றுச் செல்ல முற்பட்டபோது, ஷிப்லி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அவரை அழைத்து, நீ யார்? எதற்காக வந்தாய்? என்று கேட்டபோது, அதற்கவர்; தாங்கள் ஒரு மிகப்பெரும் வலியென்று கேள்விப்பட்டு இங்கே வந்தேன். ஆனால் எந்தவொரு அற்புதத்தையும் தங்களில் நான் காணவில்லையாதலால் திரும்பிச் செல்கிறேனென்று சொல்ல, அதுகேட்ட அவர்கள்; என்னில் ஷரீஅத்திற்கு மாற்றமான செயல் எதையும் நீ கண்டாயா எனக்கேட்க, அதற்கவர்; இல்லையென்று சொல்ல, இதைவிட வேறென்ன கராமத் வேண்டும் என்றனர்.

ஆனால் நமது காலத்திய ஜனங்களில் தொழுகை விஷயத்தில் பொடுபோக்குள்ளவராக இருந்தாலும் சரி. ஷரீஅத்தில் மறுக்கப்பட்ட காரியங்களை செய்து கொண்டிருப்பவராக இருந்தாலும் சரி. இத்தகையோரை பார்த்து விலாயத்துடையவர், கராமத்துடையவரென்று எண்ணி ஏமாந்து விடுகின்றனர். வணக்க வழிபாடுகளில் பொடுபோக்கான அவர் உணவை உட்கொள்வதற்குப் பதிலாக வெறும் பாலை மட்டுமே உணவாக எடுத்துக் கொள்வாராயின் அதுவும் மிகப்பெரிய கராமத். அவ்வாறாயின் மருத்துவமனைகளில் இருக்கும் பலபேரை நாம் விலாயத்திற்குரியவர்கள் என ஏற்றுக்கொள்ள வேண்டி வரும். ஒப்புக் கொள்வார்களா?



மார்க்க அனுஷ்டானங்களை முறையாக கடைபிடிக்காத ஒருவரிடம் வழமைக்கு மாற்றமான செய்கைகள் எனப்படும் அற்புதங்கள் வெளியாகுமாயின் அவன் ஒரு ஸிந்தீக் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள் என்பதாக அஷ்ஷெய்கு ஷிஹாபுத்தீன் ஸுஹ்ரவர்தி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் நமக்கு உபதேசிக்கின்றனர்.

மேலும் கராமத்துள்ள ஒருவரைவிட கராமத்தே இல்லாத சிலரும் நன்மக்களாக இருப்பதுண்டு என இமாம் ஷாபி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகின்றனர். ஆக மேற்கண்ட கருத்துக்களனைத்தும் நமக்கு எதைத் தெளிவுபடுத்துகின்றன எனில் உன்னால் பைஅத்துச் செய்து கொள்ளப்படுபவர் ஹலாலையும் ஹராமையும் பேணி நடப்பவராக, இறைவனது ஏவல் விலக்கல்களை எடுத்து நடப்பவராக, அவரது நடையுடை பாவனை அனைத்தும் ஷரீஅத்தென்னும் சுன்னத்திற்கு உட்பட்டதாக இருக்கிறதா என்பதை பார்க்க வேண்டுமேயன்றி உன்னை பார்த்ததும் உனது உள்ளத்திலுள்ளதை அவர் உடனே சொல்வதையும், உன்னால் எதிர்பார்க்கப்பட்டதை அவர் செய்வதையும், உனக்கு வருங்காலத்தில் இப்படியெல்லாம் நடக்கப் போகிறதென்று சொல்வதையும் கண்டு ஏமாந்து விடாதே.

வல்லோனாகிய அல்லாஹ்வின் சமீபத்துவத்தை பெற்றுக் கொண்ட பெருமக்கள் அதிகமதிகம் வணக்கங்கள் புரிந்துள்ளதாகத் தான் நாம் கேள்விப்பட்டிருக்கிறோமே அன்றி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர்கள் வணக்கங்கள் புரிந்ததேயில்லை என்றோ, முக்தியடைந்து விட்டால் எதை வேண்டுமானாலும் செய்யலாமென்றோ, அவர்களுக்கு ஏவலோ விலக்கலோ இல்லை

யென்றே, பாவங்கள் அவர்களை நரகத்திற்கு இட்டுச் செல்லாதென்றே, அவர்கள் எப்போதும் சொன்னதில்லை. இவ்வாறு பேசுவோர் வழிகேடர்கள் என்பதுதான் ஷரீஅத்தின் தீர்ப்பாகும் என இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுவதாக அல்லாமா மனவி என்பார் தமது நூலில் குறிப்பிடுகின்றனர். அதேநேரம் இப்படிப்பட்ட கருத்தை கூறுவோர் தமது கூற்றுக்கு ஆதாரமாக குர்ஆன் ஹதீஸை வேறு காட்டுகின்றனர்.

இந்நிலையில் அற்புதம் எனப்படுவது எதுவோ அதுதான் கராமத்தாகும். அதாவது ஒரு சராசரி மனிதனால் செய்துகாட்ட முடியாத காரியமாகும். இதில் அல்லாஹ்வின் நல்லடியார்கள் மூலமாக நிகழும் அற்புதங்கள் என்பது பல வகைப்படுகின்றன. அவைகளில் பாமரர்களின் உள்ளங்களை கொஞ்சம் யோசிக்க வைக்கும் அற்புதமொன்று உள்ளது. லட்சக்கணக்கான மக்கள் லட்சக்கணக்கான பணத்தை செலவுசெய்து ஆயிரக்கணக்கான மைல்களை கடந்து சென்று தவாப் செய்யும் அல்லாஹ்வின் இல்லமாகிய கஃபதுல்லாஹ் வலிமார்களை தவாப் செய்வதாகச் சொல்லப்படுவதே அந்த அற்புதமாகும்.

முதல் மனிதரும் மனித இனத்தின் தந்தையுமான ஹழ்ரத் ஸெய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் எமது இலங்கையிலிருந்து தவாப் செய்வதற்காக மக்கா முகர்ரமாவுக்குச் சென்றதாக தகவலொன்று பதிவாகியுள்ளது. ஹழ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் பாலஸ்தீனத்திலிருந்து பயணம் செய்துள்ளனர். இவற்றுக்கெல்லாம் மேலாக நமது உயிருக்கும் மேலான உத்தமத் திரு நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பல ஆண்டுகள் வரை தவாப் செய்வதை விட்டும் தடுக்கப்பட்டிருந்தனர். இப்படிப்பட்ட எந்தவொரு சமயத்திலும் ஒரு நபிக்கோ அல்லது ஒரு ரஸூலுக்கோ கஃபாவானது தாமாகச் சென்று எவரையும் தவாப் செய்ததாக இதுவரை எந்தவொரு நூலின் வாயிலாகவும் நாம் கேள்விப்பட்டதில்லை. ஆனால் சில விலாயத்துடையோருக்கே இப்படி நிகழ்ந்துள்ளதாக நாம் படித்திருக்கிறோம்.

இறைவனின் இல்லம் மனிதனை தவாப் செய்வதாகச் சொல்வது அதனை இழிவுபடுத்துவதாகும் என்றும், நபிமார்கள்



ரஸூல்மார்கள் போன்றோரை எல்லாம் தவாப் செய்யாத கஃபதுல்லாஹ் வலிமார்களை தவாப் செய்தது என்பது நபிமார்களை விட வலிமார்களின் தரத்தை உயர்த்திப் பேசுவதாகும் என்பன போன்ற கருத்துக்கள் பி.ஜே போன்றவர்களால் பிரச்சாரம் செய்யப்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது. இதெல்லாம் இவர்களின் கற்பனையாகும்.

**"அல்லாஹுதஆலா வானம் மற்றும் பூமியிலுள்ள அனைத்தையும் உங்களுக்கு வசப்படுத்தித் தந்துள்ளான். அத்துடன் கடல், நதி, சூரிய சந்திரன் இரவு பகல் போன்றவைகளையும் உங்களுக்கு வசமாக்கித் தந்திருக்கிறான்"** என்னும் குர்ஆனுடைய வசனத்தை ஆதாரமாக்கி அகிலத்திலுள்ளவை அனைத்தும் மனிதர்களுக்காகத் தான் படைக்கப்பட்டுள்ளது என்பதாக இப்னு தைமிய்யா கூறுகிறார். அவ்வாறாயின் அகிலத்திலுள்ள அனைத்தையும் விட மனிதன் மேலானவன் என்பது இதன்மூலம் தெளிவாகிறதல்லவா! இந்நிலையில் கஃபதுல்லாஹ்வை விட மனிதன் சிறப்புக்குரியவன் என்று சொல்வதில் என்ன தவறு? இதனால் தான்,...

**"முஃமின் அல்லாஹ்விடம் கஃபதுல்லாஹ்வை விட மகத்தானவன்"** என்பதாக நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுச் சொன்னதாக ஹழ்ரத் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் வாயிலாகக் கிடைக்கப் பெற்ற ஹதீஸ், சுனன் இப்னு மாஜாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அடுத்து முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் புனித மேனியை சுமந்து கொண்டிருக்கும் புனித இடம் அர்ஷைவிட மேலானது என்பதாக இமாம் மாலிக் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுவதால் (இந்த ஹதீதை மௌலவி ஸகரிய்யா சாஹிப் அவர்களும் தமது ஸதகாவின் சிறப்பு என்னும் நூலில் குறிப்பிடுகிறார்) அல்லாஹ்வின் சிம்மாசனத்தை தாழ்த்திப் பேசுவதாக யாரும் நினைத்துக் கொள்ளக்கூடாது. குற்றங் குறைகளைத் தேடி அலைபவர்களின் கூற்றுக்கு செவி சாய்க்காதீர்கள். இதுபோன்றே அருமை தோழர்களான ஸஹாபாக்களின் தரத்திற்கு மிக உன்னதமான படித்தரத்தை கொண்டுள்ள வலி கூடச் சமமாக முடியாது என்று சொல்லும் நாம் நபிமார்களை விட வலிமார்களை உயர்த்திப் பேசுவதாகச் சொல்வது வீண் பழியாகும்.

ஆசியக் கண்டத்தில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளில் மிகவும் மதிக்கத்தக்கவர்களாக பேசப்படுபவர்கள் ஆஷிகே ரஸூல் அல்லாமா அஹ்மத் ரழா கான் சாஹிப் என்பாராகும். இவர்கள் ஹதாயிக் பக்ஷிஷ் என்னும் நூலில்,...

**"உயர் பதவிக்காக அகிலத்திலுள்ள குத்புகளெல்லாம் கஃபதுல்லாஹ்வை தவாப் செய்கின்றனர். ஆனால் கஃபதுல்லாஹ் உம்மை தவாப் செய்கிறது"** என்பதாக ஸெய்யிதுனா கௌஸுல் அஃழம் அஷ்ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜீலானி ரழியல்லாஹு அன்ஹு அவர்களைப் பற்றி புகழ்ந்து பாடுகின்றனர். ஆம். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் அசாத்தியமானதோ ஆச்சரியமானதோ அல்ல என்பதால் தான்,...

وقد سمعنا سماعا محققا ان جماعة منهم شوهدت الكعبة تطوف
بهم طوافا محققا ورأيت بعضا ممن شاهد ذلك من الثقات
الاتقياء بل من السادات العلماء.

**"அவ்லியாக்களை கஃபதுல்லாஹ் உண்மையாகவே தவாப் செய்யக் கண்டேன் என்பதாக எனக்குக் கிடைத்த தகவல்கள் கூறுகின்றன. அவை மிகப்பலமான நம்பிக்கைக்குரியவைகளுமாகும். அவ்வாறு கண்டதாகச் சொன்ன சிலரை நானும் கண்டிருக்கிறேன். அவர்கள் தக்வாவுடைய நம்பிக்கைக்குரிய புனிதர்களாகும். அத்துடன் அவர்கள் கண்ணியமான அறிஞர் பெருமக்களாகும்"** என குத்புஸ் ஸமானாகிய அல்லாமா இப்னு அஸ்அதுல் யாஃபியீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது ரௌழுர் ரயாஹீன் என்னும் நூலில் பக்கம்-38ல் குறிப்பிடுகின்றனர். இதனை அல்லாமா மனாவி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தபகாத்துஸ் ஸூபிய்யா 1-18லும் குறிப்பிட்டுள்ளனர். மௌலானா முஹம்மத் ஸகரிய்யா காந்தல்வி அவர்கள் 'பழாயிலே ஹஜ்' என்னும் நூலில் கஃபதுல்லாஹ் ஷெய்குமார்களை வலம்வரச் சென்றதாகக் கூறுகிறார். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் மிக மிக அரிதாகவே நிகழ்ந்துள்ளது என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இதுபோன்றே எனது பாட்டனாராகிய ஹழ்ரத் ஸெய்யிதுனா குத்புல் அக்தாப் அஹ்மத் கபீர் ரிபாயி ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு மதீனா முனவ்வராவில் அண்ணலெங் கோமான்



முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் புனித மிகு ரௌழா ஷரீபில் வைத்து நிகழ்ந்த ஓர் சம்பவமும் தனித்தன்மை வாய்ந்த ஒன்றுதான். அச்சம்பவத்தை அஸ்ஸெய்யிது மௌலானா அப்துல்லாஹ் அல்குமாரி அவர்கள் பொய் என்பதுடன் அது பதிவு செய்யப்பட்டுள்ள அஷ்ஷரபுல் முஹத்தம் என்னும் நூல் இமாம் சுயூத்தி ரஹிமஹுல்லாஹ் அவர்களுடையதல்ல என்றும் கூறுகிறார். ஆனால் மௌலானா யூசுப் கத்தார் முஹம்மத் என்பார் அஸ்ஸிரத்துல் மர்ழிய்யா ஃபீ தர்ஜமத்தி முஅஸ்ஸிஸயித் துருகிஸ் ஸூபிய்யா என்னும் நூலின் 58-63ம் பக்கம் வரை குறிப்பிடுவதோடு ஏறக்குறைய 38 நூல்களில் இச்சம்பவம் பதிவாகி உள்ளதாகவும், மேலே சுட்டிக் காட்டப்படும் நூல் அந்நூலாசிரியருக்கு உரியதுதான் என்றும் கூறுகிறார். இதே கருத்தை அஷ்ஷெய்கு அபுல் யுமன் முஹம்மத் அவர்கள் அல் ஃபஜ்ருத் தாலி ஃபீ திக்ரிஸ் ஸைபில் காதிஃ என்னும் நூலின் 47ம் பக்கத்திலும் குறிப்பிடுகிறார். இன்னும் இந்த நிகழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்ட நூல்களில் அல்லாமா மனாவி ரஹிமஹுல்லாஹ்வின் நூலாகிய தபகாத்துஸ் ஸூபிய்யா 2-220லும், அல்லாமா குஃப்பாஜி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் ஷரஹு ஷிபா என்னும் நூலிலும், அல்லாமா ஷஃரானி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் மனாகிபுஸ் ஸாலிஹீன் என்னும் நூலிலும், அல்லாமா யாபியீ ரஹிமஹுல்லாஹ் அவர்களின் சவாதுல் ஐனைன் என்னும் நூலிலும், பெரியார் இப்னுல் முலக்கன் அவர்களின் தபகாத்துல் அவ்லியா என்னும் நூலிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்த நிகழ்ச்சியை மௌலானா அஷ்ரப் அலி தானவியும் ஏற்றுக் கொள்கிறார். இமாமவர்களின் புர்ஹானுல் முஅய்யத் என்னும் நூலை முழப்பர் அஹ்மத் உஸ்மானி என்பவரால் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டு அதற்கு அணிந்துரை பெறுவதற்காக தானவி அவர்களிடம் கொடுக்கப்பட்டிருந்தது. இத்தனைக்குப் பிறகும் மௌலானா குமாரி அவர்கள் இதனை ஏற்க மறுப்பதன் உள் நோக்கம் என்னவென்பதை அல்லாஹ்வும் அவனது ரஸூலுமே நன்கறிவர். இப்படிப்பட்ட நல்லோர்களின் கரத்தை பற்றிக் கொள்வீர்களாயின் அவர்களுடன் மிகுந்த மரியாதையோடு இருந்து நற்பயனை பெற்றுக் கொள்ளுங்கள். அவர்களின் தோழமையை பெற்றும்பேறுகெட்ட மூதேவிகளாக ஆகிவிட வேண்டாம். இவ்வாறு ஆவதைவிட முரீதாகாமல் இருப்பதே உத்தமம்.

## ஆதாப் (ஒழுங்கு)

நம்மில் பெரும்பான்மையோர் ஷெய்குமார்களின் தோழமையை இலகுவில் ஏற்படுத்திக் கொள்கின்றனர். அதேநேரம் அவர்களிடம் அதபு இல்லாததால் இறுதிவரை பிரயோஜனம் அடையாமலேயே இறந்துபோய் விடுகின்றனர். ஆதலால் இவ்விடத்தில் ஷெய்குமார்களிடம் கடைபிடிக்க வேண்டிய சில முக்கியமான விஷயங்களை உங்களின் பார்வைக்கு தருகிறோம்.

ஹழ்ரத் ஸெய்யிதுனா அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒருமுறை கஃபதுல்லாஹ்வை பார்த்து, கஃபாவே! நிச்சயமாக நீ அல்லாஹ்வின் படைப்புக்களில் மதிப்புக்குரிய ஒரு படைப்பாகும். இருப்பினும் பரிபூரணமான ஒரு முஃமின் உன்னைவிட அல்லாஹ்விடம் மதிப்புக்குரியவனாகும் என்று சொன்னார்கள். இதன்படி கஃபாவை கண்டதும் எழுந்து நிற்பது சிறப்புக்குரிய செயலாகும். ஆதலால் உங்களின் ஷெய்குமார்களை காணும்போது மரியாதை நிமித்தம் எழுந்து நில்லுங்கள்.

நீங்கள் பள்ளிவாசலில் இருக்கிறீர்களா? பாட அறையில் இருக்கிறீர்களா? நீங்கள் எந்த இடத்தில் இருந்தாலும் உங்களின் ஷெய்குமார்களை கண்டால் அந்த இடத்திலேயே எழுந்து நின்று அவர்களுக்கு மரியாதை செய்யுங்கள். ஸெய்யிதுனா அஹ்மத் இப்னு ஹன்பல் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தன்னைவிட வயதில் குறைந்த ஸுஹ்ரி என்பாரைக் கண்டதும் எழுந்து நின்று மரியாதை செய்ததை கண்ட இமாமவர்களின் புதல்வர்கள், ஒருசிறிய வாலிபரது விஷயத்தில் நீங்கள் இவ்வாறு நடந்து கொள்ளலாமா? எனக்கேட்க, அதற்கவர்கள்; அப்துர்ரஹ்மான் பின் அவ்ப் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு நான் எழுந்து நின்று மரியாதை செய்ய வேண்டாமா? என்று கேட்டனர்.

எழுந்து நின்று மரியாதை செய்வதை கீழ்காணும் நபி மொழிகளை ஆதாரமாகக் காட்டி அதைத் தடுக்க முயற்சிக்கின்றனர் சிலர். அதாவது, "நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை விட அவர்களின் அருமை தோழர்களுக்கு வேறொருவர் இருந்ததில்லை. அப்படியிருந்தும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை கண்டால் அவர்கள் எழுந்து



நிற்பதில்லை என ஹழ்ரத் ஸெய்யிதுனா அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் அறிவிப்பு திர்மிதியில் பதிவாகியுள்ளது. மேலும் அஜமிகள் சிலர் சிலருக்கு எழுந்து நின்று மரியாதை செய்வதைப் போல எனக்கும் நீங்கள் செய்ய வேண்டாமென ஹழ்ரத் ஸெய்யிதுனா அபு உமாமா ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் அறிவிப்பும்" அபூதாவூதில் பதிவாகியுள்ளது.

அடுத்து நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பூசணிக்காயை எவ்வாறு புசித்தார்கள் என்னும் விதம் தெரியவில்லை என்பதற்காக அதை புசிக்காமலேயே விட்டு விட்ட ஹழ்ரத் ஸெய்யிதுனா இமாம் ஹன்பல் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு இந்த ஹதீஸ்களெல்லாம் தெரியாதா? பின்னும் இந்த ஹதீஸ்களின் பிரகாரம் நாமும் செயல்பட வேண்டுமென சொல்லப்படுமாயின் ஒருவரைக் கண்டு இன்னொருவர் எழுந்து நின்று மரியாதை செய்யக் கூடாதெனச் சொன்ன நபியவர்களே தங்களின் அருமை மகளாரைக் கண்டால் எழுந்து நின்றதாக முஸ்லிம் ஷரீபில் பதிவாகியுள்ள ஹதீஸுக்கும், எங்களோடு உரையாடிக் கொண்டுள்ள நபியவர்கள் எழுந்து நின்றால் நாங்களும் எழுந்து விடுவோம். அருமை நபியவர்கள் தமது இல்லத்திற்குள் நுழையும்வரை நின்று கொண்டிருப்போம் என நஸாயியில் பதிவாகியுள்ள ஹதீஸுக்கும் என்ன பதில் சொல்வார்கள்? இவைகளுக்கெல்லாம் அல்லாமா இமாம் நவவி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் 'அத்தர்கீஸு பில் கியாம்' என்னும் நூலில் பதிலளிக்கின்றனர். மேலும் காமிலான ஷெய்குமார்களின் கரங்களை அல்லாமா ஆலூஸி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஹஜ்ருல் அஸ்வத் என வர்ணிப்பதால் அவர்களின் பரிசுத்தமான கரங்களை முத்தமிட்டுக் கொள்ளுங்கள்.

ஒருமுறை எங்களுடைய சர்கார் ஃபக்ருல் ஆரிபீன் நாயகத்தின் முரீதுகளில் ஒருவர் ஒழுச் செய்து கொண்டிருந்தார். அப்போது அவ்வழியாக வந்த நாயகம் அவர்களை பார்த்தும் கூட மரியாதைக்காக அவர் எழுந்து நிற்காமல் ஒழுச்செய்த பின்னரே எழுந்து நின்றார். அதைக்கண்டு நாயகமவர்கள் ஒன்றும் சொல்லவில்லை. சில நாட்களுக்குப் பின் ஒரு விருந்துக்குரிய விழாவில் பலபேர் வருகை தந்திருந்தனர். அப்போது உணவருந்துவதற்கு முன்பாக கைகளை கழுவுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு

நாயகமவர்களின் கைகள் கழுவப்பட்ட பின் மற்றவர்களின் கைகள் கழுவப்பட்டன. அதுபோது அந்த முரீதும் அவரது ஆசிரியரான மௌலவி அப்துல்லதீப் என்பாரும் அச்சபையில் இருந்தனர். முரீதுடைய கைகளை கழுவ வந்தபோது அதற்கவர், முதலில் ஆசிரியரின் கைகளை கழுவுங்கள். அதுதான் மரியாதையாகும் என்றுசொல்ல, அதுபோது சர்கார் அவர்கள் கீழ்காணும் நிகழ்ச்சியொன்றை கூறினர்,...

சட்டக்கலை மேதைகளாகிய இமாம்களான முஹம்மத், அபூயூஸுப், ஸ‧ஃபர் போன்ற பலரும் ஹழ்ரத் ஸெய்யிதுனா இமாம் அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்களின் மாணவர்களாகும். அவர்களில் மேற்கண்ட மூவரும் சட்டக்கலையில் மாபெரும் பாண்டித்தியம் பெற்ற வல்லுனர்களாகவும் முஜ்தஹிதீன்களாகவும் திகழ்ந்தவர்கள். ஆனால் முந்தைய இருவர் மட்டுமே ஸாஹிபைன் எனப் போற்றப்பட்டனர். இவ்விருவரின் கருத்துக்களுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டது. இவ்விருவருக்கும் கிடைத்த இப்பாக்கியம் ஹழ்ரத் ஸ‧ஃபர் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. காரணம் அவர் ஒழுச் செய்து கொண்டிருந்தபோது தனது ஆசிரியரான இமாமவர்களை கண்டு அவர்களுக்கு மரியாதை செய்யும் பொருட்டு எழாமல் இருந்ததே அதற்குரிய காரணமென்று சொல்லப்படுகிறது என்பதாக சர்கார் அவர்கள் சொல்ல அதன்பின் அந்த முரீத் தமது தவறை உணர்ந்து செயல்படலானர். இச்சம்பவம் ஸிரத்தே ‧ஃபக்ருல் ஆரிபீன் என்னும் நூலில் பக்கம்-162ல் பதிவாகியுள்ளது.

எனவே முரீதாக இருப்பவர் தனது சகல நிலைமைகளையும் ஷெய்கவர்களிடம் எடுத்துரைத்து அவர்களின் மேலான ஆலோசனையை பெற்றுக்கொள்ள வேண்டும். பகிரங்கமாக சொல்ல முடியாத விஷயங்களை சைக்கினை மூலம் சொல்ல வேண்டும். இனி எதையுமே சொல்லாதிருப்போமாயின் அதுவே ஒரு சுமையாகிப்போய் தரீகத்தின் நடவடிக்கைகளுக்கு தடையாக அமைந்து விடும். பாருங்கள்! ஒவ்வொருவரின் அசைவுகளையும் அவர்களின் எண்ணங்களையும் நன்றாகத் தெரிந்து வைத்துள்ள அல்லாஹ்வே, அடியான் தன்னிடம் முறையிட வேண்டும், உள்ளமுருக கண்ணீர் வடித்து தனது தேவைகளை நிறைவேற்றித் தருமாறும் தனது பிரச்னைகளை தீர்த்து வைக்குமாறும்



கையேந்தி பிரார்த்திக்க வேண்டுமென்றும் அவன் விரும்புகிறான் என்பதைப் புரிந்து முரீதுகள் செயல்பட வேண்டும்.

முரீத் எப்போதும் தனது ஷெய்கவர்களின் கட்டளைப்படி செயலாற்றி வர வேண்டும். அவரால் இடப்படும் கட்டளைகளில் பிழை காண முற்படாது உடனடியாக அவற்றை செயல்படுத்த முயல வேண்டும். சிரித்துக் கொண்டுதானே சொல்கிறார்களென நினைத்து அசட்டையாக இருந்துவிடக் கூடாது. இதற்கு உதாரணமாக அல்லாமா அஸ்ஸெய்யிது அப்துல் அஸீஸ் தப்பாக் ரஹிமஹுல்லாஹ் அவர்களால் பேசப்படும் முரீதொருவரின் சம்பவத்தை உங்களின் பார்வைக்கு தருகிறோம். அதாவது,.

ஒரு ஷெய்கு தமது உண்மையான முரீதுகளில் ஒருவரை பரீட்க்ஷிக்க எண்ணி, நீர் உமது தந்தையை அதிகம் நேசிக்கிறீரா? அல்லது என்னையா? என்றுகேட்க, அதற்கந்த முரீத்; தங்களைத்தான் அதிகம் நேசிக்கிறேன் என்று சொன்னார். அதுகேட்ட ஷெய்கவர்கள், அப்படியாயின் நான் உமது தந்தையின் தலையை கொண்டுவா என்று சொன்னால் செய்வீரா? எனக்கேட்க, கண்டிப்பாக என்றவர்; நடு நிசியான அந்நேரத்தில் வீட்டுக்குச் சென்றவர் வீட்டின் மேற்கூரை வழியாக வீட்டுக்குள் பிரவேசித்து தந்தை தாயோடு தாம்பத்திய உறவில் ஈடுபட்டிருந்ததையும் கூட பொருட்படுத்தாது அவருடைய தலையை வெட்டி எடுத்துக் கொண்டுவந்து தனது ஷெய்கவர்களின் முன்பாக வைத்தார். அப்போது அவருடைய ஷெய்கவர்கள், இது உமது தந்தையின் தலைதானா என்றுபார் எனக்கூற, அது அவரது தந்தையின் தலையாக இல்லாமல் தனது தாயோடு தவறான உறவில் ஈடுபட்டிருந்த ஓர் அன்னியனின் தலையாக இருந்தது.

நூல் : அல் இப்ரீஸ், பக்கம்-317.

பார்த்தீர்களா! ஒரு உண்மையான முரீத் என்பவர் இப்படித்தான் இருப்பார். இருப்பினும் பலவீனர்களான நம்மை நமது நாதாக்கள் பரிசோதிக்காதிருக்க அல்லாஹ்விடம் பிரார்த்திப்போமாக.

அடுத்து ஹழ்ரத் ஸெய்யிதுனா இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்குக் கிடைக்கப் பெற்ற கல்வி

மற்றும் ஞானங்களனைத்தும் நமது நாயகம் முஹம்மத் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களின் துஆவின் பரக்கத்தைக் கொண்டுதான் என்பதை நாம் தெரிந்து வைத்திருந்தாலும் அந்தத் துஆ கிடைத்ததற்குரிய காரணம் என்னவென்பதை அவர்களே எப்படி சொல்கிறார்களென்று பாருங்கள்,...

أن النبي صلى الله عليه وآله وسلم دخل الخلاء فوضعت له وضوءا فلما خرج قال من وضع هذا فأخبر فقال اللهم فقهه فى الدين.

**"அவசியத்தின் தேவை நிமித்தமாக சென்று வந்த நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு ஒழு செய்வதற்குரிய ஏற்பாட்டை தயார் செய்து வைத்திருந்தேன். வெளியே வந்த நபியவர்கள் இதை வைத்தவர் யாரென்று கேட்க, நான் தானென்று சொல்லப்பட்ட போது, அதைக்கேட்ட அவர்கள் - அல்லாஹும்ம ஃபக்கிஹ்ஹு ஃபித்தீனி என எனக்காக பிரார்த்தித்தார்கள்"**

ஆதலால் உன்னால் இயன்ற வரை உனது ஷெய்குக்கு பணிவிடை செய்துவா. அதற்காக அவர்களுடைய அருகிலேயே இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. நீ தொலைவிலிருந்தாலும் அவர்கள் உன்னை கண்காணித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்னும் எண்ணத்தில் அவர்களது கட்டளை பிரகாரம் செயலாற்றுவதும் ஹலாலான முறையில் சம்பாத்தியம் செய்து அவர்களின் சேவைகளுக்குஉன்னால் முடிந்த உதவியை செய்வதும்கூட அவர்களுக்காக செய்யும் பணிவிடையேயாகும்.

ஷெய்கவர்கள் ஒரே விஷயத்தை குறித்து ஒவ்வொருவரிடமும் பல்வேறுபட்ட கருத்துக்களை சொல்வதைக் கண்டு நீ மயங்க வேண்டாம். காரணம் தம்மிடம் கேட்போரிடம் எப்படிச் சொன்னால் அவர் திருப்தி அடைவார் என்பதை அவர்கள் மட்டுமே நன்கறிவர். உதாரணமாக தேகம் உஷ்ணமாக இருக்கும்போது காய்ச்சலென்று மருத்துவரை நாடும் நோயாளிக்கு வழங்கப்படும் மாத்திரைகள் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறாக இருப்பதை நீ யோசித்துப் பார்க்க வேண்டும். காரணம் காய்ச்சல் எதனால் ஏற்பட்டது என்பதை மருத்துவர் தான் அறிவார். இதனாலேயே நமது நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம், வணக்கங்களில் சிறந்த வணக்கம் எது வென்று வினவப்பட்ட போது, ஒருவரிடம் தொழுகை என்றார்



கள். இன்னொருவரிடம் தர்மம் என்றார்கள். வேறொருவரிடம் ஜிஹாத் என்றார்கள். பின்னும் ஒருவரிடம் பெற்றோருக்கு பணி விடை செய்தல் என்றும் பலவாறாகப் பதிலளித்தார்கள்.

இதுபோன்றே பணிபுரியும் இடத்தில் அடுத்தவரால் நீங்கள் மன உளைச்சலுக்கு உள்ளாக்கப்படலாம். அல்லது மற்றவரால் அடக்கி ஒடுக்கப்படலாம். அதற்காக மனம் தளராதீர்கள். அப்படிப்பட்டோர் நமது உயிரினும் மேலான உத்தமத் தூதராகிய முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின்,...

**"யார் உங்களுக்கு தீங்கிழைத்தாலும் அதனை தாங்கிக் கொள்ளுங்கள். அவ்வாறு பொறுமையோடு இருக்கும் உங்களைப் பற்றி அல்லாஹ் தனது வானவர்களிடையே பெருமையாகப் பேசுகிறான். அத்துடன் அவர் நாளை இறுதிநாளில் அச்சம் தீர்ந்தவராக வருகை தருவார் அபூ ஹுரைறாவே!"** என்னும் நல்லுபதேசத்தை கண்டு மனச் சாந்தி அடையுங்கள்.

நிச்சயமாக யாரை நீங்கள் உங்களின் ஷெய்காக ஏற்று அவர்களின் கரத்தை பிடித்துள்ளீர்களோ அவர்களில் உங்களை நீங்கள் அர்ப்பணித்து விடுங்கள். அவர்கள் மீது சந்தேகம் கொள்ளாதீர்கள். சந்தேகம் எப்போதுமே சந்தோஷத்தை தராது. உண்மையில் அவர் அதற்கு தகுதியற்றவராக இருந்தாலும் அவர் கரம் பற்றிய நன்மக்களின் பரக்கத்தால் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். அதற்கு அவரது சில்சிலா இடையில் துண்டிக்கப் பட்டிருக்காது வரிசைத் தொடராக இருக்கிறதா என்பதை பார்த்துக் கொள்ளுங்கள்.

மேலும் காமிலான முர்ஷிதின் உறவை துண்டித்துக் கொள்பவர் பறக்க முடியாத பறவைகள் கூண்டை விட்டும் வெளிப் படும் போது பெரிய பறவைகளின் துன்பங்களுக்கு இலக்காவது போல பல்வேறு பிரச்னைகளை எதிர்கொள்ள வேண்டி வரும். இதேபோல காமிலான ஒரு ஷெய்கிடம் பைஅத்தான பின் வேறொரு ஷெய்கிடம் நீங்கள் பைஅத்து பெறாதீர்கள். அவ்வாறு எவரேனும் பைஅத்துப் பெறுவாராயின் தரீகத்தின் அடிப்படையில் சூபிய்யாக்களின் பரிபாஷையில் அவர் முர்தத்தாக கணிக்கப்படுவார். இவ்வாறே உங்களிடம் எந்த மாதிரியான

திறமைகள் இருந்தாலும் எந்தத் தருணத்திலும் உங்களுடைய ஷெய்கின் அனுமதியின்றி சுயமாக அதனை செயல்படுத்தாதீர்கள். மேலும் உங்களிடமுள்ள திறமையை வைத்து ஜனங்களை விரைவில் தெளிவுபடுத்தி விடலாமென நினைப்பதும் உண்மையை சொல்ல வேண்டுமென்னும் ஆக்ரோஷமும் இருப்பதில் தவறில்லை. ஆனால் அதனுடைய பின்விளைவுகள் என்னவென்பதை உங்களின் ஷெய்கு மட்டுமே அறிவார் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

முரீத் என்பவன் தனது வணக்கத்தை விட காமிலான ஷெய்கின் தூக்கத்தை சிறப்பான ஒன்றாகக் கருத வேண்டும். ஆம். அவருடைய தூக்கம் என்பது விரயமானதல்ல. அன்னோருக்கு தூக்கத்திலே தான் காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன. கனவு என்பது ஒருவகை வஹியாகும். நபித்துவம் முற்றுப் பெற்று விட்டாலும் கூட 'புஷ்ரா' என்னும் கனவு இருந்து கொண்டே இருக்கும் என்பதாக நமது நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களால் சொல்லப்படும் ஹதீஸ் இன்றும் நமக்கு ஆதாரமாக விளங்கிக் கொண்டுள்ளது. ஆதலால் அவர்களின் தூக்கம் உனது விதியையே மாற்றியமைக்கும் வல்லமை கொண்டதாகும். அவர்களின் உறக்கம் கூட வித்ராகும் என்பதற்கு இமாம் ஷஃரானி அவர்கள் நமக்கு கீழ் காணும் சம்பவத்தை ஆதாரமாக எடுத்துக் காட்டுகின்றனர்,...

இமாம் அஹ்மத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தமது தோழர்களிடம் இமாம் ஷாபி ரழியல்லாஹு அன்ஹு அவர்களை பற்றி அதிகமாக சொல்லி வைத்திருந்தனர். ஒருநாள் இமாம் ஷாபி அவர்கள் இமாம் அஹ்மத் அவர்களின் இல்லத்தில் தங்க வேண்டி வந்தது. அன்றிரவு இமாம் ஷாபி அவர்கள் நன்றாக உறங்கி விட்டனர். எந்தவொரு வணக்கத்திலும் ஈடுபடவில்லை. இதை கண்காணித்துக் கொண்டிருந்த இமாம் அஹ்மதவர்களின் தோழர்கள் அவர்களிடம் இதை முறையிட்டனர். அதைக் கேட்ட இமாம் அஹ்மதவர்கள் அவர் உறங்கினாலும் இச்சமூகத்திற்குத் தேவையான நூறு சட்டங்களை ஆய்வுசெய்து கண்டு பிடித்துள்ளார். அதேநேரம் நான் இரவு முழுவதும் தொழுதும் கூட ஒரேயொரு சட்டத்தை தான் ஆய்வு செய்துள்ளேன் என்றனர். இவ்வாறு முரீதுகள் தமது ஷெய்குமார்களின்



விஷயத்தில் நல்லெண்ணத்தை கடைபிடிக்க வேண்டும். மாறாக உமது குறுகிய மட்டமான எண்ணத்தை கொண்டும் உம்மிடமுள்ள சிற்றறிவைக் கொண்டும் ஷெய்குமார்களின் செயல்பாடுகளில் குற்றமோ குறையோ காண வேண்டாம்.

இவ்வாறே பொறாமை கொள்ளும் எந்தவொரு முரீதும் ஒருபோதும் வெற்றிபெற முடியாது. சகோதரர்களின் கண்ணியத்தை பாதுகாப்பதும், அவர்களோடு கௌரவமான முறையில் நடந்து கொள்வதும் முரீதுகளிடம் காணப்பட வேண்டிய பிரதானமான நற்குணங்களாகும். ஷெய்குமார்களின் சபைகளில் அமரும்போது உங்களின் உள்ளங்களை ஒருமுகப் படுத்திக் கொள்ளுங்கள். ஷெய்குமார்களின் முன்னிலையில் அவர்களின் அனுமதியின்றி அடுத்தவரிடம் பேசுவது முஸாபஹா செய்வது ஸலாம் சொல்வது போன்ற செயல்கள் நல்லதல்ல. காரணம் உங்களின் ஷெய்கு உங்களுடைய உள்ளங்களின் ஊசலாட்டங்களை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதை உங்களால் உணர முடியாது. இயன்ற வரை முரீதுகள் தமது தரீகத்திற்குரிய ஆடைகளை அணிவது மிகவும் சிறந்ததாகும்.

இதேபோல காமிலான ஷெய்குடைய கரத்தை பற்றியவர்கள் இதர பெருமக்களை கண்ணியப்படுத்தலாம். நபிமார்களையும் நாதாக்களையும் முஃமின்களான நல்லடியார்களையும் நேசிக்கலாம். அதேநேரம் தனது ஷெய்குக்கு இன்னொரு ஷெய்கை இணையாக்குவது எல்லா வகைகளிலும் தடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

உண்மை முரீதாகிறவர் தன்னுடைய ஷெய்கவர்களால் விரட்டப்பட்டாலும், அடித்தாலும் உதைத்தாலும் அதற்காக இன்னொருவரின் தோழமையை ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது. எஜமான் அடித்தாலும் அரவணைத்தாலும் அவனை விட்டு விலகாமல் அவனையே சுற்றிச் சுற்றி வரும் ஒரு நாயைப்போல முரீதும் தனது ஷெய்குடைய விஷயத்தில் இருக்க வேண்டும். ஷெய்குடைய உறவின்போது ஏற்படும் சோதனைகள் கஷ்டங்கள் போன்றவற்றை பொறுமையோடு தாங்கிக்கொள்ள வேண்டும். அத்துடன் நான் அவர்களுடைய பிள்ளையாகும்.

ஆதலால் அவர்கள் என்னை எந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தாலும் சரி. என்னைப் பற்றி யாரிடம் என்ன சொன்னாலும் சரி. அதைப்பற்றி நான் ஒருபோதும் தவறாக எண்ண மாட்டேன் என்னும் நல்லெண்ணம் அவருக்குள் எப்போதும் இருக்க வேண்டும். மேற்கூறப்பட்ட விஷயங்களையெல்லாம் பொறுமையோடு ஏற்று சகிக்காதவன் பெண்களைக் கொண்டும் உள்ளம் இறந்து போவதைக் கொண்டும் அல்லாஹ்வால் சோதிக்கப் படுவான் என்பதாக அஷ்ஷெய்கு அபுல் அப்பாஸ் முர்ஸி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகின்றனர். மேலும் உண்மையான முரீத் தனது ஷெய்கோடு உள்ளத்தாலேயே உரையாட வேண்டும். தன்னைக் கண்டால் தன்னோடு பேச வேண்டும், தன்னை வரவேற்க வேண்டும் என்றெல்லாம் முரீத் எதிர்பார்க்கக் கூடாது. உங்களைக் கண்டும் காணாதவர் போல உங்களின் ஷெய்கவர்கள் இருப்பதை பார்த்து உங்களில் யாரும் தவறான எண்ணங் கொள்ளக் கூடாது. காரணம் காமிலான ஷெய்கு என்பவர் அல்லாஹ்வோடு தொடர்புடையவராகும். அதனால் சில நேரங்களில் அவர் தமது பிள்ளைகளையே கூட அடையாளம் காண முடியாமல் போய்விடலாம்.

தன்னை வந்துசேரும் அனைத்து வகையான நன்மைகள், புகழ், வசதி, வாய்ப்புக்கள் யாவும் எனது ஷெய்கின் பொருட்டால் தான் எனக்குக் கிடைத்ததென்று முரீத் நம்பிக்கை கொள்ள வேண்டும். ஷெய்குமார்கள் அனைவரும் ஏகமனதாகச் சொல்லும் ஒரு விஷயம் என்னவெனில் 'ஏன்' என்னும் வாக்கியத்தை முரீத் தமது ஷெய்கிடம் எப்போதுமே பயன்படுத்தக் கூடாது. இப்படிப்பட்ட வார்த்தைகளை பிரயோகிக்கும் எந்தவொரு முரீதும் ஜெயமடைந்ததேயில்லை. அத்துடன் உண்மையான முரீதுகள் கூட தமது நோக்கத்தில் இதுவரை வெற்றி பெறாமல் இருப்பதற்குரிய முக்கியமான காரணங்களில் இதுவும் ஒன்றாகும். தன்னிடம் ஷெய்கவர்கள் இன்னொருவரை பற்றி பேசும் விஷயங்களை அடுத்தவருக்கு சொல்லாமல் இருப்பதோடு இதை தன்னிடம் மட்டும் ஏன் சொன்னார்கள் என்பதை ஆலோசித்து பார்த்து தன்னை திருத்திக் கொள்ள வேண்டுமேயன்றி தவறான முடிவுக்குச் சென்றுவிடக் கூடாது.

மேலும் ஒருவர் காமிலான ஷெய்காக இருந்தால் அவரது



பெற்றோரும், உற்றார் உறவினர்களும் கூட ஸாஹிதீன்களாகவும் தக்வாதாரிகளாகவும் முத்தகீன்களாகவும் இருந்தாக வேண்டுமென்றும் சிலர் கற்பனை செய்து கொள்கின்றனர். நபிமார்கள் மற்றும் வலிமார்களின் வரலாறுகளை படிக்காதவர்களிடமே இப்படிப்பட்ட கற்பனையைக் காண முடியும். இவர்கள் ஹழ்ரத் ஸெய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களின் புதல்வர், ஹழ்ரத் ஸெய்யிதுனா நூஹ் அலைஹிஸ்ஸலாமவர்களின் புதல்வர், ஹழ்ரத் ஸெய்யிதுனா லூத் அலைஹிஸ்ஸலாமவர்களின் மனைவி, ஹழ்ரத் ஸெய்யிதுனா இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் சிறிய தந்தை, ஹழ்ரத் ஸெய்யிதுனா இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமவர்களின் முதல் மனைவி, இத்தனை ஏன்! நமது உயிரினும் மேலான உத்தமத் தூதர் நபிகள் நாதர் எந்தல் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் சிறிய தந்தை அபூலஹப் மற்றும் அபூஜஹ்ல் போன்றோரின் நிலைமைகளை சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். இதில் நபியாகவும் ரஸூலாகவும் இருப்பவர்களின் குடும்பத்தை சேர்ந்தவர்களே அந்த நபிமார்களுக்கும் ரஸூல்மார்களுக்கும் சொல்லொணா துன்பங்களையும் துயரங்களையும் தந்ததோடு அவர்களுடைய கடுமையான விரோதிகளாகவும் இருந்துள்ளனர். எனவே ஒருவர் நபியாகவோ அல்லது ரஸூலாகவோ அல்லது வலியாகவோ இருப்பதற்காக அவர்களை சார்ந்தோரும் நல்லவர்களாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

அருள்கூர்ந்து ஷெய்குமார்களை பரிசோதிக்கும் எண்ணத்தில் அவர்களிடம் செல்லாதீர்கள். உங்களின் இதயங்களை பாது காத்துக் கொள்ளுங்கள். அது உங்களை மிகப்பெரும் பாதாளத்திற்குள் கொண்டுபோய் இறக்கி விட்டுவிடும். இருப்பினும் இந்த இடத்தில் ஒரு சம்பவத்தை எடுத்துக் காட்டுவது மிகவும் உசிதமாக இருக்குமென்று நினைக்கிறோம். அதாவது,...

இமாமுஷ் ஷாபியாக காணப்பட்ட அபூஸயீத் அப்துல்லாஹ் என்பார் கூறுகின்றனர். நானும், ஷெய்கு அப்துல்காதிர் ஜீலானி அவர்களும், இப்னு ஸகாவும் ஒரு பெரியாரைக் காண்பதற்காக போய் கொண்டிருந்தோம். அப்போது இப்னு ஸகா பதிலளிக்க முடியாத ஒரு கேள்வியை நான் அவர்களிடம் கேட்கப் போகிறேன் என்று சொன்னார். அதற்கு நான், அவர்களின் அருளை

நாடித்தான் பார்க்கப் போகிறேன் என்பதாக அப்துல்காதிர் ஜீலானி அவர்கள் சொன்னார்கள். அதுபோது நானும் ஒரு கேள்வியை கேட்பேன். அதற்கு அவரது பதில் எவ்வாறு இருக்கும் என்பதை தெரிந்துகொள்ள நான் விரும்புகிறேன் என்று அப்துல்லாஹ் என்ற நான் சொன்னேன்.

அதன்பின் அவர்கள் இருந்த இடத்திற்கு நாங்கள் போய் சேர்ந்தபோது, அவர்களை ஒரு மணி நேரத்திற்குப் பிறகே காணும் வாய்ப்பை பெற்றோம். அப்போது அப்பெரியார் இப்னு ஸகாவை கோபத்தோடு பார்த்தவர்களாக பதிலளிக்க முடியாத கேள்வியை கேட்க விரும்புகிறாயா என்ன? இதுதான் அதற்குரிய பதில் என்று சொன்னவர்கள் உம்மிடம் குப்ருக்குரிய அடையா ளத்தை நான் பார்க்கிறேன் என்றனர். அதன்பின் நான் கேட்க நினைத்த கேள்விக்கு பதிலளித்த அவர்கள், உலகம் உம்மை மிகைத்து விடும் என்றனர். அதன்பின் ஷெய்கு அப்துல் காதிர் ஜீலானி அவர்களை பார்த்து, இவரொரு உலகம் போற்றும் உத்தமராகத் திகழ்வார் என்று கூறினர்.

இப்னு ஸகா மிகப்பெரும் மார்க்க மேதையாகத் திகழ்ந்தவர். வேதக்கார உலமாக்களெல்லாம் இவரைக் கொண்டு தோற்க டிக்கப்பட்டனர். இறுதியில் ஒரு பெண்ணின் வலையில் சிக்கி கிறிஸ்தவ மதத்திற்கு மாறிப் போனார். உமக்கு என்ன நடந்த தென்று அவரது தோழரில் ஒருவர் கேட்டபோது, அதற்கவர்; ஒரு பெரியாருடைய சாபமென்று சொன்னார். அப்பெரியார் சொன் னவை அனைத்தும் அப்படியே நடைபெற்றதாக இச்சம்பவத்தை அறிவிப்பவர் சொல்லும் தகவலானது 'பதாவா ஹதீதிய்யா, பக்கம்-216. நஷ்ருல் மஹாஸினில் அலிய்யதி, பக்கம்-202ல்' பதிவாகியுள்ளது.

படிப்பு பிரச்சாரம் போன்றவைகளில் ஈடுபட்டாலும் ஷெய்குமார்களின் தோழமையில் கிடைக்கும் பிரயோஜனங்கள் போன்றவை அவைகளில் ஒருபோதும் கிடைக்காது. எனவே நல்லோரின் தோழமையை தேடிக் கொள்ளுங்கள் என்கிறார்கள் எனது ஆக்காவாகிய அஸ்ஸெய்யித் அஹ்மத் கபீருர் ரிபாயி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள். மேலும் முரீதாக இருப்போர் மற்றவரை விட தான் படித்தவன், பணக்காரன் என்றெல்லாம்



பெருமை கொள்ளக்கூடாது. உலகாதாயம் கருதி பொய் சொல்லக் கூடாது. அடுத்தவரின் தீய விஷயங்களை இன்னொருவரிடம் சொல்லக்கூடாது. அடுத்தவர் பாராட்ட வேண்டுமென எதையும் செய்யக்கூடாது. விருந்தாளிகளை உபசரிக்க வேண்டும்.

மொத்தத்தில் அழகான நற்குணங்களை உங்களின் ஆபரண மாக அணிந்து கொள்ளுங்கள். பகலில் நோன்பும் இரவில் வணக்கமுமாக செயல்படும் ஒருவர் பெற்றிடும் அந்தஸ்த்தை தூங்கிக் கொண்டிருக்கும் நற்குணமுள்ள ஒருவர் பெற்று விடுகிறார் என்பதாக அஸ்ஸெய்யித் அஹ்மத் கபீருர் ரிபாயி ரழியல்லாஹு அன்ஹு கூறுகின்றனர். உங்களின் குடும்பத் தார், மனைவி, மக்கள், அண்டை வீட்டார், பணியாளர்கள் போன்ற அனைவரோடும் பாசமாக இருங்கள். அதிகமதிகம் அருள் மறையாம் குர்ஆனை ஓதி வாருங்கள். தொழுகையில் ஈடுபாடுள்ளவர்களாக இருப்பதோடு மானக்கேடான, பிறரால் தூற்றப்படக் கூடிய காரியங்களை விட்டும் உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்ளுங்கள். நீங்கள் எங்கிருந்தாலும் உங்களின் ஷெய்குமார்களின் கௌரவம் தூற்றப்படுவதற்குரிய காரியங் களில் ஈடுபட வேண்டாம். அரசியல்வாதிகள், உலகாசை கொண்ட செல்வந்தர்களின் தோழமைக்குள் சென்று விடாதீர் கள். அத்துடன் உங்களுக்குத் தரப்பட்ட விர்துகளை நேமமாக தொடர்ந்து ஓதி வாருங்கள். அதிகமாக திக்ர் செய்யுங்கள்.

## திக்ர்

முரீதானவர் அதிகமதிகம் **'அல்லாஹ்'** என்னும் திரு நாமத்தை சொல்பவராக இருக்க வேண்டும். இயன்றவரை ஷெய்கு நாயகம் வீற்றிருக்கும் இடத்தில் நிகழும் திக்ர் மஜ்லிஸில் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும். திக்ர் மஜ்லிஸில் அமர்ந்தால் மட்டும் தலையை ஆட்டி அசைத்து சப்தமாக அல்லாஹ் அல்லாஹ் என்று சொல்லிவிட்டு அதன்பின் அல்லாஹ்வுடைய நினைவின்றி இருக்காமல் சதா அவனுடைய நினைவிலேயே ஹலாலான உழைப்பை தேடி வாழ பழகிக் கொள்ளுங்கள்.

நமது நாதாக்களின் கரத்தை பற்றிய முரீதீன்கள் திக்ர் செய்யும் விதம் மற்றும் முரீதீன்கள் கடைபிடிக்க வேண்டிய

ஒழுக்கங்களை அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஷஹாதாவில் குறிப்பிட்டிருக்கிறோம். ஒவ்வொரு தரீக்காவிலும் வெவ்வேறு வகையான திக்ருடைய முறைகள் இருப்பதால் அதை நாம் இங்கே குறிப்பிடவில்லை.

அல்லாஹ் அல்லாஹ் என்று வாயால் மட்டும்தானே சொல்கிறோம். அதனால் உள்ளத்தில் எந்தவித மாற்றத்தையும் காண முடியவில்லையே என நினைத்து சபைகளில் கலந்து கொள்வதை நிறுத்திவிட வேண்டாம். ஒருமுறை திக்ர் செய்யும்போது அல்லாஹ் என்று சொன்னபின் மீண்டும் சொல்ல வேண்டுமென்ற எண்ணமும் அல்லாஹ்வின் நல்லுதவியைக் கொண்டு ஏற்படும் ஒன்றானதால் அதனை அல்லாஹ் ஏற்றுக்கொண்டு விட்டான் என்பதே அதற்குரிய பொருளாகும் என்பதாக அல்லாமா ரூமி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகின்றனர்.

திக்ர் செய்யும்போது மரக்கட்டையை போல் இருக்காது ஆடி அசைவது நல்லதோர் செயலாகும். அது அவருக்குள் உற்சாகத்தை அதிகப்படுத்தும். தலையை அசைத்து திக்ர் செய்ய மக்கள் வெட்கப்படுகிற காலம் நமது காலமாகி விட்டது. இதற்கு கீழ்காணும் நபிமொழிகளை ஆதாரமாகக் கொள்ளலாம். அதாவது,...

كانت الحبشة يرقصون بين يدي رسول الله صلى الله عليه وآله
وسلم ويقولون بكلام لهم محمد عبد صالح فقال رسول الله صلى
الله عليه وآله وسلم ما ذا يقولون فقيل انهم يقولون محمد عبد
صالح فلما رآهم في تلك الحالة لم ينكر عليهم واقرهم على ذلك.

"ஹபஷிகளான தோழர் பெருமக்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடையே ஆடி அசைந்து கொண்டிருப்பார்கள். அப்படிப்பட்ட நேரங்களில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஸாலிஹான அடியாராகும் என அவர்களுடைய பாஷையில் பேசிக் கொள்வார்கள். அவர்கள் என்ன சொல்கிறார்களென்று நபியவர்கள் கேட்டிருக்கிறார்கள். அத்துடன் அவர்கள் ஆடி அசைந்து நடனமாடுவதை நபியவர்கள் தடுக்கவில்லை. மாறாக அதனை ஏற்றுக் கொண்டார்கள் என்பதாக ஹழ்ரத் ஸெய்யிதுனா அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றனர்" நூல் : அஹ்மத்.



صليت مع علي كرم الله وجهه صلاة الفجر فلما انفتل عن يمينه مكث
كان عليه كآبة حتى اذا كانت الشمس على حائط المسجد قيد رمح
صلى ركعتين ثم قلب يده فقال والله لقد رأيت اصحاب محمد صلى
الله عليه وآله وسلم فما ارى اليوم شيئا يشبههم لقد كانوا يصبحون
صفرا شعثا غبرا بين ايديهم كامثال ركب المعزى قد باتوا لله سجدا
وقياما يتلون كتاب الله يتراوحون بين جباههم واقدامهم فاذا اصبحوا
فذكروا الله مادوا (تحركوا) كما يميد الشجر في يوم ريح وهملت
اعينهم حتى تبتل والله ثيابهم.

"ஒருமுறை நான் ஹழ்ரத் ஸெய்யிதுனா அலிய்யுன் கர்ரமல்லாஹு வஜ்ஹஹூ அவர்களோடு பஜ்ருடைய தொழுகையை தொழுதேன். தொழுகை முடிந்தபின் சூரிய ஒளி மஸ்ஜிதின் சுவரில் ஒரு ஈட்டியின் அளவுக்கு விழும்வரை தமக்கு ஏதோ பிரச்னை ஏற்பட்டது போன்ற உணர்வில் இருந்தார்கள். அதன்பின் அவர்கள், நான் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் அருமை தோழர்களை பார்த்திருக்கிறேன். அவர்களுக்கு நிகரானவர்கள் இன்று யாருமில்லை. அவர்கள் இரவு காலங்களில் வணக்கம் புரிந்தவர்களாகும். பயணம் செய்தவர்களைப் போன்று அவர்கள் களைப்படைந்தவர்களாக காலையில் காட்சியளிப்பார்கள். பொழுது புலர்ந்து விட்டால் புயல் வீசும்போது மரங்கள் ஆடி அசைவது போல அவர்களும் ஆடி அசைந்து திக்ர் செய்வார்கள். இன்னும் அவர்களின் கண்களிலிருந்து வழிந்தோடும் கண்ணீர் அவர்களின் ஆடைகளையெல்லாம் நனைத்து விடும் என்று சொன்னார்கள்"

நூல் : அல்பிதாயா வந்நிஹாயா, பாகம்-8, பக்கம்-6. ஹகாயிக் அனித்தஸவ்வுப், பக்கம்-128.

இந்த நபிமொழியை ஆதாரமாகக் காட்டி திக்ருடைய நேரத்தில் ஆடி அசைவதை சுன்னத்தான செயலாகும் என அல்லாமா அப்துல் கனீ நாபில்ஸி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகின்றனர்.

இந்த இடத்தில் 'ஸமா:' பற்றி சொல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டு விட்டது. நமது தாய்நாட்டைத் தவிர மற்ற அனைத்து நாடுகளிலும் சூபிய்யாக்களிடம் இதோர் பிரபலமான விஷய

மாகும். இந்நிலையில் இந்திய தேசத்தில் குறிப்பிட்ட சிலரிடம் இது பெரும் சர்ச்சைக்குரிய விஷயமாகவும் காணப்படுகிறது. இந்த ஸமா.ஃ என்பது நமது நாட்டில் எமது தரீகத்தின் மூலமாகவே புகழ் பெற்றதென்று சொன்னால் மிகையாகாது. இதனை தமிழில் இஸ்லாமிய கீதமென்று சொல்லலாம். இஸ்லாமிய கீதத்தை கேட்க விரும்பாத ஒருவர் கூட நமது நாட்டில் இல்லையென்று சொன்னால் அதில் தவறேதுமில்லை.

அல்லாஹ்வையும் நபிமார்களையும் வலிமார்களையும் புகழ்ந்து சிலர் பாடிக் கொண்டிருக்கும் போது வேறுசிலர் ஆடிக் கொண்டிருப்பர். இன்னும் சிலர் கரகோஷம் செய்து கொண்டிருப்பர். சிலர் குதித்துக் கும்மாளமிட்டுக் கொண்டிருப்பர். இதனை பாமரர்கள் மட்டுமின்றி சராசரி உலமாக்கள் கூட ஆச்சரியத்துடன் பார்க்கின்றனர். அத்துடன் இச்செயலை ஆட்சேபித்து அதற்கு ஆதாரமாக சில தகவல்களையும் முன் வைக்கின்றனர். இத்தகைய ஆட்சேபனைகளுக்கெல்லாம் அல்லாமா அப்துல்கனீ நாபில்ஸி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் 'ஜம்வுல் அஸ்ருர் ஃபீ ரத்தித் தஃனீ அனிஸ் சூபிய்யதில் அக்யாரி அஹ்லித் தவாஜுதிபில் அத்காரி' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ள பதிலையே நாமும் உங்களின் பார்வைக்கு தருகிறோம்.

قال رسول الله صلى الله عليه وآله وسلم السماع حرام ومن حل السماع فهو كافر ومن حضر معهم فهو فاسق ومن خالف هذا الحديث فهو ملعون فى التوراة والانجيل والزبور والفرقان.

**"ஸமா.ஃ என்பது ஹராமான நிகழ்ச்சியாகும். அதை கூடுமென்று சொன்னவன் காபிராகும். அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டவன் பாவியாகும். இந்த ஹதீஸுக்கு மாற்றம் செய்தவன் நான்கு வேதங்களிலும் சாபமிடப்பட்டவனாகும் என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஹதீஸ் ஷெய்கு ஷரீக் என்பாருக்குரிய பஹ்ருல் அலக் என்னும் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக ஒரு குற்றச்சாட்டை முன் வைக்கின்றனர்"** இது இட்டுக்கட்டப்பட்ட வார்த்தையாகும்.

السماع لهو مكروه يشبه الباطل من قال به ترد شهادته.

**"ஸமா.ஃ நிகழ்ச்சியானது வெறுக்கத்தக்க வீண் விளையாட்டாகும். இதில் ஈடுபடுவோரின் சாட்சிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது"** என ஷாபி மத்ஹபின் அறிஞர்கள் தீர்ப்பளிக்கின்றனர் என்பது இரண்டாவது குற்றச்சாட்டாகும்.



மது விபச்சாரம் போன்றவைகளில் ஈடுபட்டுக் கொண்டுகிளப் போன்ற இடங்களில் நடைபெறும் ஆடல் பாடல்களை குறித்து சொல்லப்பட்ட வார்த்தையை தவறாகப் புரிந்து கொண்டதாக இமாமவர்கள் பதிலளிக்கின்றனர்.

يجب على ولاة الامور زجرهم وردعهم واخراجهم من المساجد.

**"இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் ஈடுபாடு உள்ளோரை தலைமைத்துவத்தில் இருப்போர் இறை இல்லங்களை விட்டும் வெளியேற்றி அவர்களை விரட்டுவது அவசியமாகும்"** என்பது மாலிக் மத்ஹபின் தீர்ப்பெனச் சொல்வது வீண் பழியாகும். மாலிக் மத்ஹபின் எண்ணற்ற நூல்களை நாம் பார்வையிட்டுள்ளோம். ஆனால் இப்படியொரு வாசகத்தை நாம் இதுவரை பார்த்ததேயில்லை. இதேபோல,...

**"ஸமா.ஃ போன்ற நிகழ்ச்சிகளில் ஈடுபாடு உள்ளோரின் பின்னால் தொழக்கூடா"**தென்பது ஹன்பலி மத்ஹபை சார்ந்த அறிஞர்களின் தீர்ப்பாகும் என்று கூறப்படுவதும்.,,,

**"இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்பட்ட விரிப்புகளை சுத்தம் செய்யாமல் அதில் தொழக் கூடா"**தென்பது ஹனபி மத்ஹபை சார்ந்த அறிஞர்களின் தீர்ப்பாகுமென்று சொல்லப்படுவதும் வீண் பழியேயாகும். ஆக மொத்தத்தில் சூபிய்யாக்களுடைய சபைகளில் நிகழ்த்தப்படும் ஸமா.ஃ என்னும் நிகழ்ச்சியானது நல்லதொரு செயலாகும். இதில் கலந்து கொள்ளத்தான் வேண்டுமென்றோ அல்லது இது மார்க்கத்திற்கு விரோதமான செயலென்றோ அதில் தொடர்புடையோரை உதாசீனப்படுத்துவதற்கு யாருக்கும் உரிமையில்லை. விளக்கம் பெற விரும்புவோர் குத்புஸ் ஸமான் அப்துல்லாஹ் பின் அஸ்அதுல் யாபிஃ ரஹிமஹுல்லாஹ் அவர்களின் நஷ்ருல் மஹாஸின் என்னும் நூலின் பக்கம்-308-332வரை பார்க்க வேண்டுகிறோம்.

இதைப்பற்றிய விரிவான நூலொன்று உர்து மொழியில்

தயாராகிக் கொண்டுள்ளது. அவசியம் ஏற்படின் தமிழாக்கமும் செய்யப்படும்.

அல்லாஹ்வின் நல்லடியானே! மார்க்கம் என்பது உபதேசமாகும் என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சொல்லித் தருகின்றனர். இதில் உபதேசமானது அல்லாஹ்வைக் கொண்டும் அவனது தூதராகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக் கொண்டும் நம்பிக்கை கொண்ட விசுவாசிகளுக்கே உரித்தான ஒன்றாகும் என்றும் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் உபதேசம் செய்வதும் எழுதுவதும் மிக மிக இலேசானதாகும். ஆனால் அதை ஏற்றுக் கொள்வதும் அதன்படி செயலாற்றுவதும் மிக மிகக் கடினமாகும். உள்ளத்தில் தோன்றும் ஊசலாட்டங்களுக்கெல்லாம் தலை சாய்க்கும் அடியார்களுக்கு இது மிகவும் கசப்பானதாகும். உலகின் பயனைக் கருதி கல்வி கற்போர் தடை செய்யப்பட்ட காரியங்களை விரும்பி செய்து கொண்டிருப்பார்கள். இறுதியில் அவர்கள் கற்ற கல்வி அவர்களுக்கே பாதகமாக அமையும் என்பதை அவர்கள் மறந்து விட்டனர். இதுபற்றி நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்,...

**"தன்னிடமுள்ள அறிவை கொண்டு அல்லாஹ் எந்த அடியானுக்கு பிரயோஜனம் பெற வைக்கவில்லையோ அத்தகைய அறிஞனை நாளை மறுமையில் மிகக் கடுமையான வேதனைக்கு உட்படுத்தப்படுவான்"** என்னும் ஹதீஸையும்,...

**"தன்னுடைய அறிவைக் கொண்டு பிரயோஜனம் பெற்றிடாத ஆலிமுக்கு அல்லாஹுதஆலா வழங்கும் வேதனையால் நரகவாதிகளே வெறுப்படைந்து உன்னிடமுள்ள துர்நாற்றம் எங்களுக்கு அருவருப்பை ஏற்படுத்துகிறதே! அப்படியென்ன தான் செய்தாய்? என வினவுவார்களென்றும் அதற்கவன், நான் ஆலிமாக இருந்தும் அதனால் எந்தவொரு பிரயோஜனத்தையும் பெற்றுக் கொள்ளவில்லை என்று சொல்வான்"** என்னும் ஹதீஸையும் இவர்கள் மறந்து விட்டனர்.

அடியானே! ஏடுகளை சேகரிப்பதாலும் அதிகமதிகம் அறிவைத் தேடுவதாலும் உனக்கு எந்தப் பிரயோஜனமும்



ஏற்பட்டுவிடப் போவதில்லை. கற்றதை செயல்படுத்துவதே உனக்குப் போதுமானது. அல்லாஹ் தனது அடியார்களில் அவன் விரும்பியவர்களை சுவர்க்கத்தில் நுழைய வைப்பான் என்னும் விஷயத்தில் எந்தவொரு ஐயமுமில்லை என்றாலும் அந்த அருட்கொடைகள் என்பது அமல் செய்யும் ஒருவனுக்குத்தான் சொந்தமாகுமே அன்றி அமல் செய்யாமல் இருந்து கொண்டு அல்லாஹ்வின் அருட்கொடை தனக்குக் கிடைக்குமென்ற எண்ணமானது தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வதாகும்.

**"அமல் செய்யாமல் சுவர்க்கத்தை தேடுவது பாவமாகும்"** என்கிறார்கள் ஹழ்ரத் ஸெய்யிதுனா ஹஸனுல் பஸரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள். இந்நிலையில் நீ கற்ற கல்வி உன்னை பாவமான செயல்களை விட்டும் விலக்கவில்லையாயின், உன்னை வணக்க வழிபாட்டுக்காக தயார்படுத்தவும் இல்லையாயின் அந்த அறிவு நாளை இறுதிநாளில் உன்னை நரக நெருப்பை விட்டும் காப்பாற்றாது என்பதையும் மறந்து விடாதே.

فانفقوا مما رزقناكم من قبل ان يأتي احدكم الموت.

**"மரணம் உன்னை வந்தடையுமுன் அல்லாஹ் உனக்கு அளித்தவற்றிலிருந்து செலவு செய்துகொள்"** என்கிறது அருள் மறை. இந்த வகையில் கல்வியும் அல்லாஹ்வால் உனக்கு அளிக்கப்பட்ட ஒரு செல்வமேயாகும். ஆதலால் நீ கற்றதை பிறருக்கு போதிப்பதோடு யாருக்கு எதைச் சொல்ல வேண்டும்? அதையும் எப்போது சொல்ல வேண்டும்? என்பதையும் புரிந்து செயல்படுவதோடு நீயும் அதன்படி செயல்படத் தவறாதே.

கடுமையான உஷ்ணக் காலத்தில் ஹழ்ரத் ஸெய்யிதுனா ஹஸனுல் பஸரி ரஹிமஹுல்லாஹ் அவர்களுக்கு தாகம் எற்பட்டு குளிர்பானம் கொடுக்கப்பட்ட போது அதை அவர்கள் பருகவில்லை. அதன் குளிரைத் தொட்டுப் பார்த்துவிட்டு உரக்கச் சப்தமிட்டவர்களாக மயங்கிக் கீழே விழுந்து விட்டார்கள். அதன்பின் அவர்கள் சுய நினைவுக்கு வந்தபோது என்ன நடந்ததென்று கேட்க, அதற்கவர்கள்; **"நரகவாதிகள் சுவர்க்கவாதிகளிடம் தண்ணீர் தாருங்கள்"** எனக் கேட்பது ஞாபகத்திற்கு வந்து விட்டதாகச் சொன்னார்கள்.

மேலும் மார்க்க ஞானம் மற்றும் இறை ஞானம் மட்டும் இருந்தால் போதும். எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்றிருந்தால் மார்க்க ஞானத்திற்கும் இறை ஞானத்திற்கும் முன்னோடிகளாக இருந்தவர்களெல்லாம் அவரவருக்குரிய கடமைகளை நிறைவேற்றி விட்டு இரவு காலங்களில் நிம்மதி யாக தூங்கியிருக்கலாம். ஆனால் அதற்கு மாறாக யார் எந்தக் கலையில் தேர்ச்சியுடையோராக இருந்தார்களோ அந்த முன்னோர் களெல்லாம் அதிகமதிகம் வணக்க வழிபாடுகளை நிகழ்த்தியுள் ளனர். அவர்களின் வரலாறுகளை பேசும் நாமும் அதை கேட்கும் நீங்களும் தான் இன்றுவரை வாழ்க்கையில் எந்தவித முன்னேற் றத்தையும் காணாதவர்களாக இருக்கிறோம். ஆதலால் இரவை வெறுமனே உறக்கத்தில் கழித்துவிட வேண்டாம். அவ்வாறு செய்வோமாயின்,...

فان كثرة النوم بالليل تدع صاحبها فقيرا يوم القيامة.

**"இரவின் அதிகமான தூக்கமானது அவனை மறுமையில் பகீராக ஆக்கிவிடும்"** என்னும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் கருத்தை கவனத்தில் கொள்வோமாக.

அதேநேரம் இன்று இரவு காலங்களில் வணக்கம் புரிவதை விட்டும் ஜனங்களை தூரப்படுத்தக் கூடிய இலகுவான வழி எதுவோ அதுதான் இன்று பிரச்சாரம் செய்யப்படுகிறது. அதாவது, இன்ன சூறாவை இத்தனை முறை ஓதிவிட்டு உறங்கி னால் இரவு முழுவதும் நின்று வணங்கிய நன்மையை அவன் பெற்றுக் கொள்வான், இத்தனை ஹஜ்ஜுச் செய்ததற்குரிய கூலியை பெறுவான் என்றுகூறி இறை இல்லங்களிலேயே தூங்கியும் விடுகின்றனர்.

அல்லாஹ்வின் அடியானே! ஹழ்ரத் ஸெய்யிதுனா லுக்மான் அலைஹிஸ்ஸலாமவர்கள் தமது புதல்வர்களை நோக்கி, **"அதி காலையில் நீங்கள் தூங்கிக் கொண்டிருக்க வேண்டாம். அவ்வாறு செய்வது அதிகாலையில் கூவும் சேவலைவிட மோசமானவர்கள் என்பதை நிரூபித்து விடும்"** எனக் கூறியதை நாம் கவனத்தில் கொண்டு செயல்படுதல் நல்லதாகும்.

இன்னும் நாம் வணங்க வேண்டுமெனில் அதற்காக எப்ப



டியும் வணங்கலாம் எனக்கருதி ஒவ்வொருவரும் அவரவர் இஷ்டப்படியெல்லாம் செயல்பட முடியாது. உதாரணமாக நோன்பு என்பது ஒரு வணக்கம். அதற்காக பெருநாள் போன்ற நாட்களில் நோன்பு நோற்கலாமா? தொழுகையும் ஒரு வணக்கம் தான் என்பதற்காக அசுத்தமான ஆடைகளோடு அதை நிறை வேற்ற முடியுமா என்ன? ஆதலால் வணக்கம் என்பது அல்லாஹ் வின் ஆணைக்கொப்ப நமது நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் நடைமுறைக்கொப்ப நபியவர் களைக் கொண்டு நமக்குக் காட்டித் தரப்பட்டவைகளாகும். ஆதலால் நமது சொல் செயல் அசைவுகள் போன்ற அனைத் தையும் ஷரீஅத்திற்குரிய வரைமுறைக்குள் நாம் அமைத்துக் கொள்ள வேண்டும்.

ஷரீஅத்தின் படி அதனுடைய நிபந்தனைகளைக் கொண்டு வணக்கத்தை நிறைவேற்றுவது போல தரீகத்தின் படி உள்ளச்சம் மற்றும் பயபக்தியோடு வணக்கங்களை இடைவிடாது செய்து வந்தால் அப்போது அவர்களின் உள்ளங்களில் ஊற்றெடுக்கும் உதிப்புகள் தான் இல்முத் தஸவ்வுப் என்பதாகும். இதை வார்த்தைகளால் விளக்க முடியாது எனக் கூறப்படும் அல்லாமா ஷ.'.ரானி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் கூற்று அல் ஹகாயிக் அனித்தஸவ்வுப் என்னும் நூலின் 329ம் பக்கத்தில் கூறப் பட்டுள்ளது.

ஞானியின் உள்ளத்தில் அல்லாஹ்வைக் கொண்டு உதிப்பாக்கப்பட்ட ரகசிய அறிவுகளை பாமரர்களுக்கு வெளிப் படுத்தாமல் இருப்பது ஞானியின் மீது கடமையாகும். இனி அதை அவர் வெளிப்படுத்துவாராயின் பல்வேறு பிரச்சினைகளை அவர் எதிர்கொள்ள வேண்டி வரும் என்றும் இமாமவர்கள் யவாகீத் என்னும் நூலில் குறிப்பிடுகின்றனர்.

இனி இல்ம் என்பது மூன்று வகைப்படும். (1) **இல்முல் அக்ல்** : அவசியமாக்கப்பட்ட அனைத்து அறிவுகளுமாகும். ஆதாரப்பூர்வமான தெளிவான விஷயங்களாகும். சொல்வதை கேட்பவன் எளிதாக கிரகித்துக் கொள்ளும் விஷயங்களாகும். இது ஷரீஅத்தின் வெளிப்பகுதியாகும்.

(2) **இல்முல் அஹ்வால்** : இதற்கு அமிர்தத்தை உதாரண

மாகச் சொல்லலாம். தாம்பத்திய வாழ்க்கையையும் சொல்லலாம். அனுபவிப்பனை தவிர வேறு யாராலும் இதைப் புரிந்துகொள்ள முடியாது.

*(3)* இல்முல் அஸ்றார் : இது அறிவுக்கு அப்பாற்பட்டதாகும். இது ஷரீஅத்தின் உட்புறமாகும். முதல் வகையைச் சார்ந்தோரிடம் இதைப்பற்றி பேசும்போது இதை அவன் மறுக்க முயலுவான். இந்த அறிவானது இல்ஹாமின் வாயிலாக மட்டுமே கிடைக்கும். இந்த அறிவை இல்முல் பாத்தின் என்றும் சொல்லப் படுவதுண்டு. இதனை அடுத்து வரும் மர்பூஆன ஹதீஸ் நமக்குச் சுட்டிக் காட்டுகிறது,...

العلم علمان علم باللسان وذلك حجة الله على عباده وعلم
بالجنان فذلك علم النافع.

**"நாவுடன் தொடர்புடைய கல்வி என்றும், உள்ளத்தோடு தொடர்புடைய கல்வி என்றும் இருவகை கல்வியுண்டு. இதில் முதல்வகை கல்வி அடியார்களுக்கு ஆதாரமாக இருப்பதாகும். இருப்பினும் இரண்டாவது வகை கல்வியே பயனுள்ள அறிவாகும்"** என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கூறுகின்றனர்.

سألت جبريل عليه السلام عن علم الباطن ما هو فقال قال الله
هو سر بيني وبين احبائي اودعه في قلوبهم.

**"ஹழ்ரத் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாமவர்களிடம் இல்முல் பாத்தினை குறித்து வினவினேன். அது எனக்கும் எனக்கு விருப்பமான அடியார்களுக்கும் இடையேயான ரகசியமாகும். அதை அவர்களுடைய உள்ளங்களில் நான் போடுகிறேன் என்று அல்லாஹ் சொன்னதாக பதில் தந்தனர்"** இது முஸ்னதுல் பிர்தௌஸ் என்னும் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

علم الباطن سر من سر الله وحكم من حكم الله يقذفه الله
في قلب من يشاء من عباده.

**"அல்லாஹ்வுடைய ஞானம் மற்றும் அல்லாஹ்வுடைய ரகசியமே இல்முல் பாத்தினாகும். அல்லாஹ் தனது அடியார்களில்**



**தான் விரும்பியவர்களின் உள்ளங்களில் இதை உதிப்பாக்குகிறான் என்று ஹழ்ரத் செய்யிதுனா அலி கர்ரமல்லாஹு வஜ்ஹஹு கூறுகின்றனர்"**

أن من العلم كهيئة المكنون لا يعلمه الا اهل العلم بالله فاذا
نطقوا به لم يذكره الا اهل الغرة بالله.

**"அல்லாஹ்வை அறிந்த பெரியோர்களிடம் மட்டும் சில ஞானங்கள் இருக்கின்றன. அதனை அவர்கள் சொல்வார்களாயின் அஹ்லுல் கிர்ராக்கள் (அல்லாஹ்வை மறந்தவர்கள்) மறுப்பார்கள்"** என்று நமது நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சொல்வதை காண முடிகிறது. இது அல்லாஹ்வுக்கும் அவனது நெருக்கமான அடியார்களுக்கும் இடைப்பட்ட ரகசியம் என்பதால் தான்,...

افشاء سر الربوبية كفر.

"இறைவனுடைய ரகசியங்களை வெளிப்படுத்துவது குப்ராகும்" எனக் கூறப்படுகிறது. ஆனால் இதற்கு மாற்றமாகச் சொல்லப்படும் கருத்துக்களை ஏற்பதாயின் இவ்வுலகிலேயே அல்லாஹ்வை காணமுடியும் எனச் சொல்லப்பட்டிருக்க வேண்டும்.

மேலும் தரீகத்துடைய ஷெய்குமார்கள் அவர்களுடைய நூல்களிலும் தொகுப்புக்களிலும் அவர்கள் சொன்னதாக நம்மை வந்தடைந்த நம்பிக்கைக்குரிய எந்த தகவலிலும் அல்லாஹ்வை இவ்வுலகில் முகக் கண்ணால் காண முடியும் என்றோ, அல்லது அவர்களில் எவரேனும் கண்டதாகவோ சொன்னதைப் பற்றி நான் அறிய மாட்டேன் என்று இமாம் சுயூத்தி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது 'த:ஈதுல் ஹகீகதில் அலிய்யா' என்னும் நூலின் 53ம் பக்கத்தில் கூறுகின்றனர்.

**"தான் கொல்லப்படலாம் எனப் பயந்து ஜனங்களுக்கு எத்தி வைக்காமல் ஹழ்ரத் செய்யிதுனா அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மறைத்த அறிவுப் பொக்கிஷங்களும்"**

"என்னிடமுள்ள விஷயங்களை நான் சொன்னால் என்னை

விக்ரஹ ஆராதனைக்காரன் எனத் தீர்ப்பளித்து விடுவார்கள். அல்லது என்னைக் கொலை செய்ய தூண்டுவார்கள் என்பதற்காக ஹழ்ரத் ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் புதல்வர் ஹழ்ரத் ஸெய்யிதுனா ஸைனுல் ஆபிதீன் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் வெளிப்படுத்தாமல் மறைத்த விஷயங்களும்'' மூன்றும் வகையைச் சேர்ந்த இல்முல் லதுன்னீ மற்றும் இல்முல் அஸ்றார்களேயாகும் என்பதாக இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகின்றனர். - யவாக்கீத்.

அடுத்து சூபிய்யாக்களுடைய நூல்களில் குறிப்பாக அல் மிஸ்குல் அத்பர் அஷ்ஷெய்குல் அக்பர் நாயகம் அவர்களும், அஷ்ஷெய்கு அப்துல்கரீம் அல்ஜியலி ரஹிமஹுல்லாஹ் அவர்களும் பதிவு செய்துள்ள கருத்துக்களனைத்தும் இல்முல் முகாஷபாவைச் சார்ந்தது என்பதை ஞானிகள் மிகத்துல்லியமாக தெளிவுபடுத்தி உள்ளனர். இப்படிப்பட்ட நூல்களை சூபிய்யாக்களில் ஆரிபீன்களாகவும் சாலிகீன்களாகவும் இருப்போரே பார்வையிட வேண்டும். (ஹகாயிக் பக்கம்-365) ஆதலால் இப்படிப்பட்ட விஷயங்களை ஆரிபீன்கள் பாமரர்களுக்கு சொல்லக்கூடாது. மீறி சொன்னால் அவர்களின் அறிவுக்கு எட்டாத அக்கருத்துக்களை அவர்கள் எதிர்க்கத்தான் செய்வார்கள். பின்னும் அக்கருத்துக்கள் ஷரீஅத்திற்கு மாற்றமானவைகளல்ல என்பதாக நாம் சொல்லிக் கொண்டிருந்தாலும் ஷரீஅத்தோடு மட்டும் தங்களின் அறிவை சுருக்கிக் கொண்டுள்ள மக்கள் அதை மறுப்பதில் ஆச்சரியமில்லை தான்.

ما انت محدث قوما حديثا لم تبلغه عقولهم الا كان على بعضهم فتنة.

**''மனிதர்களின் சிந்தனைகளுக்கு அப்பாற்பட்ட விஷயங்களை சொல்ல வேண்டாம். அதனால் பிரச்னைகள் தான் தோன்றும்''** என்பதும் நபியவர்களின் அருள் வாக்காகும்.

ஷெய்குல் அக்பரை மட்டுமல்ல. இன்னும் எத்தனையோ நாதாக்களை ஷரீஅத்துடைய அறிஞர்கள் மதம் மாறியோரெனத் தீர்ப்பளித்து அவர்களை கொலையும் செய்துள்ளனர். ஊரைவிட்டு விரட்டியும் உள்ளனர். கைது செய்து கூண்டிலும் அடைத்துள்ளனர். அதற்காக அவர்கள் அந்த அறிஞர்களை இஸ்லாத்தின் மூலக்கருவான ஏகத்துவத்தை அறியாதவர்களென்று சொல்ல



வில்லை. மாறாக நஸீப் இல்லாதவர்கள் என்றுதான் சொன்னார்கள். வேறுசில நாதாக்கள் அந்த அறிஞர்கள் செய்ததை பாராட்டியும் உள்ளனர்.

காரணம் ஷரீஅத்தின் வெளிப்புறம் பாதுகாக்கப்பட வேண்டும். அதனுடைய புனிதத்துவம் பேணப்பட வேண்டும். அது பாதுகாக்கப்பட வில்லையாயின் மார்க்கம் என்பது எடுப்பார் கைப்பிள்ளையாகிப் போய்விடும். யாரும் எதையும் செய்யலாம் என்னும் கருத்துக் கணிப்புக்கு சமுதாயம் தள்ளப்பட்டு விடும். அதற்காகத்தான் மேற்கண்ட விஷயங்களை பாமரர்களுக்கு சொல்லக் கூடாதெனத் தடுத்தனர். உலமாக்கள் மட்டும்தான் இவ்வாறு செயல்பட்டதாக நாம் நினைத்துவிடக் கூடாது. இது தவறான கணிப்பாகி விடும். மாறாக விலாயத்துடைய நன்மக்களும் இதில் அடங்குவர். இனி ஒருசிலர் ஆதரிப்பதைக் கொண்டு அது தீர்ப்பாகி விடாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

**''யார் ஹிக்மத் - ஞானம் கொடுக்கப்பட்டாரோ அவரே அதிக மான சிறப்புக்குரியவராகும்''**

**''ஹிக்மத்தை கொண்டும் அழகான உபதேசத்தை கொண்டும் உமது ரட்சகனின் பால் அழைப்பீராக''** என்னும் திருமறை வசனங்களை ஓதிக்காட்டி முதலில் ஞான விளக்கம் தான் சொல்லப்பட வேண்டும் என்றும் பிரச்சாரம் செய்யப்படுவதுண்டு.

இப்படி பிரச்சாரம் செய்யும் உலமாக்கள் அல்லாமா அபூ தாலிபுல் மக்கியுடைய 'இல்முல் குலூப்' என்னும் நூலை பாருங்கள். அதில் அவர்கள்,...

قال ابن عباس رضى الله عنهما الحكمة هي المعرفة بالقرآن
ناسخه ومنسوخه ومحكمه ومتشابهه ومقدمه ومؤخره وحلاله
وحرامه وامثاله.

**''குர்ஆனுடைய வசனங்களில் நாசிக் மன்ஸூக் எது? முஹ்கமான முதஷாபஹான வசனங்கள் எது முகத்தம் முஅக்கர் எது ஹலால் ஹராம் எது என்பனவற்றை அறிந்திருப்பது ஹிக்மத் என்பதாக ஹழ்ரத் ஸெய்யிதுனா இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றனர்''**

மேலும் ஹிக்மத் என்பதற்கு ஞானம் என்பதாக பொருள் கொள்வதில் தவறேதுமில்லை. ஆனால் அது ஸாஹிதீன்களிடம் காணப்படும் ஒரு விஷயமாகும். ஹராமான பொருளை ஹலாலா அல்லது ஹராமா என்னும் சந்தேகத்திற்குரிய நிலையில் உண்பவனிடம் கண்டிப்பாக இந்த ஞானம் இருக்காது. அவன் ஞானியாகவும் இருக்க மாட்டான். மாறாக அவன் சாணியாகும். பின்னும் ஞானியாக இருப்பவன் யாருக்கு எதை சொல்ல வேண்டுமோ அதை அதற்குத் தகுதியானவர்களிடம் மட்டுமே சொல்லுவான். அப்போது தான் அவன் அந்த ஞானத்திற்குரிய மரியாதையை கொடுத்தவனாகக் கருதப்படுவான். இவைகளெல்லாம் ஒரு ஞானியிடம் இருக்க வேண்டிய பண்புகளாகும்.

ليس في كل الزقاق يصلح العسل وكذلك ليس في كل القلوب تسكن
الحكمة ان الزقاق تطهر العسل وتحفظه ما لم تتحزق او تقحل
وكذلك القلوب تصلح للحكمة ما لم تخرقها الشهوات ويقحلها
الطمع ويدنسها الشح.

**"ஒவ்வோர் பாத்திரமும் தேன் சேகரிக்க தகுதி பெறுவதைப் போல ஒவ்வோர் இதயத்திலும் ஹிக்மத் என்பது குடியிருக்காது. ஸகாக் என்னும் தோலால் செய்யப்பட்ட ஒரு பையாகிறது தேனை சுத்தம் செய்து பாதுகாக்கப்படுவதற்காக துவாரமிடப்படாது இருப்பது போல பழமை வாய்ந்ததாகவும் இருக்கக் கூடாது. இதுபோன்றே ஹிக்மத் குடியிருக்கும் இதயமானது சிற்றின்பங்களை விட்டொழிந்ததாக பேராசையால் பாழடைந்ததாக கஞ்சத்தனத்தால் அசுத்தமடைந்ததாகவும் இருக்கக் கூடாது"** இன்னும் இதுபோன்ற பல்வேறு கருத்துக்கள் அதில் பதிவாகியுள்ளன.

மேலும் ஷரீஅத் என்பதும் தரீக்கத் என்பதும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட விஷயங்கள் என்னும் தவறான கருத்து பாமரர்களிடையே நிலவுகிறது. இவ்வாறு பிரித்ததால் தான் பாமரர்கள் இதைப்பற்றிய விளக்கங்களை ஆச்சரியமான கண்ணோட்டத்துடன் பார்க்கின்றனர். இனி ஷரீஅத் என்பதும் தரீக்கத் என்பதும் ஒன்றுதான். அதற்கு இரு பக்கங்கள் இருந்தாலும் அவருக்கு ஒரு சட்டம் இவருக்கு ஒரு சட்டமென்னும் பாகுபாடு எதுவும் இதில் கிடையாது. ஒவ்வொரு கலையிலும் பொய்யர்கள் நுழைந்து அக்கலைக்கும் அதை சார்ந்தோருக்கும் பாதிப்பை ஏற்படுத்துவது



போன்று சூபிய்யாக்களென்று தம்மை அழைத்துக் கொள்வோர் மத்தியிலும் இப்படிப்பட்டோர் இருக்கத்தான் செய்கின்றனர். அதேநேரம் இவர்களிடமிருந்து பாமரர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

அடுத்து தீன் என்பது ஈமான், இஸ்லாம், இஹ்ஸான் ஆகிய மூன்று பகுதிகளை உள்ளடக்கியதாக இருப்பது போன்று ஷரீஅத் என்பது இரு பக்கங்களை கொண்டதாக இருக்கிறது. எது ஷரீஅத்தோ அதுதான் தரீகத் என்றிருக்கும் போது ஒன்று மற்றொன்றுக்கு எப்படி மாறுபட்டதாக இருக்க முடியும்? மாற்றமில்லை எனில் 'குல்லு ஹகீகத்தின் காலபத்திஷ் ஷரீஅத்த பஹிய ஸிந்தீக்குன்' ஷரீஅத்திற்கு மாற்றமான ஒவ்வொரு ஹகீகத்தும் ஸிந்தீகாவாகும் என்று எப்படிச் சொல்ல முடியும்? இதற்கு பல்வேறு வகையான விளக்கங்களை சொல்லலாம். ஹகீகத்தைப் பற்றி பேசுபவர் ஷரீஅத்திற்கு மாற்றமாக செயல்படுவாராயின் அவர் ஸிந்தீக் என்பது ஒரு பொருளாகும். ஷரீஅத்தின் வெளிப்பகுதியோடு தொடர்புள்ளவர்களுக்கு அதனுடைய உட்பகுதிக்குரிய கருத்துக்களை சொல்வது ஸந்தகாவாகும் என்பது இன்னொரு கருத்தாகும்.

தரீகத் இல்லாத ஷரீஅத் - அதாவது உட்பகுதி இன்றி வெளிப்பகுதியோடு மட்டும் தன்னை வரையறுத்துக் கொள்வது பாவச் செயலாகும். அதேநேரம் அதற்கு மாற்றமாக இருப்பது ஸந்தகாவாகும். உட்பகுதியை பற்றி குரல் கொடுப்போர் வெளிப்பகுதியோடு அவர்களது தொடர்பு எப்படியுள்ளது என்பதை அவரவர் பகுதியில் வாழும் மக்கள் தான் அதைக் குறித்து சாட்சி சொல்ல வேண்டும்.

மேலும் தரீகத் வேறு ஷரீஅத் வேறு என்றிருந்தால் ஹனபி மத்ஹபைச் சார்ந்த அறிஞர் பெருமக்களில் முக்கியமானதொரு இடத்தை வகிக்கும் அல்லாமா இப்னு ஆபிதீன் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தரீகத்தும் ஷரீஅத்தும் பால் மற்றும் தயிரைப் போன்றதாகும் எனக் கூறியிருக்க மாட்டார்கள்.

كل حقيقة لا تشهد لها الشريعة فهي زندقة.

"ஷரீஅத்தால் உறுதி செய்யப்படாத ஒவ்வொரு ஹகீகத்தும்

ஸந்தகாவாகும்'' இது கௌஸுல் அஃழம் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் கூற்றுகும். அதாவது மார்க்கத்தின் முக்கிய அங்கமான வெளிப்புறம் அற்றோரிடம் அவர்களுக்கு தேவையற்ற, அவர்களால் புரிந்துகொள்ள முடியாத விஷயங்களை சொல்வதாகும்.

**''அல்லாஹ்வை அறிவது மார்க்கத்தின் தலையாய விஷயமாகும்'' ''மனு மற்றும் ஜின்கள் அல்லாஹ்வை அறிவதற்காகவே படைக்கப்பட்டார்கள்''** எனும் தீர்ப்பின்படி ஒவ்வொரு மனிதனும் அல்லாஹ்வை அறிந்திருக்க வேண்டும். தன்னைப் படைத்து தனக்குத் தேவையான அனைத்தையும் வழங்கிக் கொண்டிருக்கும் தனது ரட்சகனை அறியாதிருப்பது மாபெரும் வருத்தத்திற்குரிய விஷயமாகும்.

அதற்காக நபிமார்களும் வலிமார்களும் எவ்வாறு அறிந்துள்ளார்களோ அவ்வாறே நீயும் அறிந்து கொள்ள முயல்வதைவிட மடத்தனமான செயல் வேறு எதுவும் இருக்க முடியாது. ஆதலால் ஒவ்வொருவரும் அவரவர் சக்திக்கேற்றவாறு அறிந்திருப்பதே போதுமானதாகும். எனவே சுன்னத் வல் ஜமாஅத்தை சார்ந்தோரோடு நீயும் சேர்ந்து வாழு. அதுவே இன்று ஈமான் பாதுகாக்கப்பட போதுமான வழியாகும்.

மேலும் அந்த நாதாக்களின் உள்ளங்களில் உதிப்பான ரகசியங்களை பாமரர்களுக்கு சொல்லவே கூடாது என்றிருந்தால் அவைகள் தொகுக்கப்பட்டிருக்கவும் கூடாதுதானே என நீங்கள் கேட்கலாம். ஹழ்ரத் அலிய்யுல் வபா ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் சில ஆரிபீன்கள்,...

ஆரிபீன்கள் அவர்களுடைய ரகசியங்களையும் தத்துவங்களையும் நூலுருவில் எதற்காக அமைத்தனர்? சிருஷ்டிகள் அதைப் புரிந்து கொள்ள மாட்டார்கள் என்னும் நல்லெண்ணம் அவர்களுக்கு இல்லையா? யாருக்கு எதைச் சொல்ல வேண்டும் என்னும் தொலைநோக்குச் சிந்தனை உடையவர்களாக இருந்திருந்தால் அதை அவர்கள் தொகுத்திருக்க மாட்டார்கள். அதனால் குறுகிய சிந்தனை உடையோரும் அவர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்க வாய்ப்பும் ஏற்பட்டிருக்காதே? எனக் கேட்கப்பட்ட போது, அதற்கவர்கள்,...



ஒரு உவமையைக் கூறி விளக்கினர். அதாவது, மதிய நேரத்தின் சூரிய ஒளி கண்பார்வை குறைவானோருக்கு சங்கடத்தையும் வயது முதிர்ந்தோருக்கு சோர்வையும் ஏற்படுத்தும் என்பது அல்லாஹ்வுக்குத் தெரியாதா? தெரிந்தும் வெளிப்படுத்தினன் எனில் அதில் அபாயங்கள் இருப்பதைப் போல பிரயோஜனங்களும் இருப்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இதுபோன்றே ஞானிகள் அதை கோர்வை செய்ததெல்லாம் அதற்குத் தகுதியற்றோர் அதை வாசிக்கக் கண்டால் அதை விட்டும் அவர்களை தடுப்பதற்காகவே அன்றி அனைவருக்கும் (தெரிய வேண்டும், சொல்ல வேண்டும், விளக்க வேண்டும்) என்பதற்காக அல்ல என்றார்கள்.

இல்லையில்லை. அந்த நாதாக்களின் நூல்கள் அனைவராலும் தெரிந்து கொள்ளப்படுவதற்காகத் தான் அச்சாகிறது எனக் கூறுவோமாயின் அப்படிப்பட்ட நூல்களில் காணப்படும் விஷயங்களை தெளிவுபடுத்துவதற்காக அந்தக் காலத்தில் வகுப்புக்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை என்னும் இமாம் சுயூத்தி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் கூற்றை கொஞ்சம் கவனியுங்கள். இன்று உலகில் காணப்படும் அரபிக் கல்லூரிகளில் அகீதா - தஸவ்வுப் என்றொரு பிரிவு பாடத்திட்டத்தில் இருந்தாலும் அவைகள் அளவுக்கு அதிகமாக போதிக்கப்படுவதேயில்லை. மாறாக அல்லாமா சஃதுத்தீன் தப்தாஸானி போன்றோரின் கருத்துக்கள் அடங்கிய நூல்கள் தான் பாடத்திட்டத்தில் வைக்கப்பட்டுள்ளன. இந்த நூல்கள் எப்படிப்பட்ட கருத்துக்களை மையமாகக் கொண்டது என்பதை அறிவுள்ளோர் அறிவார்கள். அதற்கென்று சூபிகளின் வருகை காலங்காலமாக இருந்தும் அதைபற்றி யாரும் வெளிப்படையாக சொன்னதுமில்லை.

சூபிய்யாக்களின் கருத்துக்களை அதற்குத் தகுதியில்லாத (பொது மக்களிடம்) பகிரங்கப்படுத்துவதானது குர்ஆனை ஏற்க மறுக்கும் ஜனங்களுள்ள பகுதிக்கு எடுத்துச் செல்வதை போலாகும் என்பதாக அல்லாமா அஷ்அரி ரஹிமஹுல்லாஹ் கூறுகின்றனர். நல்லோர் வாழ்ந்த காலத்திலேயே சூபிய்யாக்களின் கருத்துக்களை எல்லோரிடமும் சொல்லக் கூடாதென்னும் நம்பிக்கையில் அன்றிருந்தோர் வாழ்ந்துள்ளனர் என்னும்போது சூபிய்யாக்களின் கருத்துக்கள், ஈமானின் அகமியம், கலிமாவின்

உண்மைப் பொருள் மற்றும் பொதுமக்கள் இல்லாததை இருப்ப தாகக் கருதி பகிரங்கமான ஷிர்க்கில் மூழ்கிக் கிடக்கிறார்கள் என்பது அன்றிருந்தவர்களுக்குத் தெரியவில்லையா? ஜனங்க ளுக்கு புரியும்வண்ணம் அவர்களுக்குமா சொல்லத் தெரியவில்லை?

தகுதியில்லாத ஒருவரிடம் ஒரு விஷயத்தை கூறுவது பன்றியின் கழுத்தில் மாலை போடுவது போல என்றும் சொல் வார்கள். துவக்க காலத்திலிருந்தே பன்றியின் கழுத்தில் தங்க மாலை போடப்பட்டிருந்தால் அதை ஆட்சேபிக்க முடியாதென்று சொல்லலாம். இருபதாவது நூற்றாண்டு வரை போடப்படாம லிருந்த மாலை இருபத்தோராம் நூற்றாண்டில் போடப்பட்டால் அதை ஆட்சேபிக்கத்தானே வேண்டும்?

இதன்றி அல்லாஹ்வை அறிய வேண்டுமெனில் அதற்கு உள்ளம் பரிசுத்தப்படுத்தப்பட வேண்டும். வாய் பேச்சைக் கொண்டு உள்ளம் பரிசுத்தமாவதில்லை. மனோ இச்சைகளுக்கு இடங் கொடுக்காதவர்களாக இருக்க வேண்டும். சிற்றின் பங்களை துண்டித்துக் கொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும். சிற்றின்பத்தில் மூழ்கிப் போனவர்கள் நாதம் வாசித்தாலென்ன? ஞானம் பேசினாலென்ன? இதனாலெல்லாம் உள்ளம் உயிர்பெறப் போவதில்லை. ஞானம் என்பது ஏடுகளின் வழியாகப் பிறந்துவரும் ஒன்றுமல்ல.

அருமை நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் 23 ஆண்டுகள் ஏகத்துவப் பிரச்சாரம் செய்தது உண்மைதான். அதற்காக நாமும் வணக்க வழிபாடுகளை விட்டு விட்டு ஏகத்துவ விளக்கங்களை சொல்லத் துவங்குவோமாயின் 23 வருடங்களல்ல. 23000 வருடங்கள் அதற்காக செலவு செய்தாலும் சமுதாயம் சீரழியுமே அல்லாமல் சீரடையாது. மேலும் ஷரீஅத்துச் சம்பந்தமான அறிவாக இருந்தாலும் போதுமான அளவு பொதுமக்களுக்குத் தெரிந்திருந்தாலே போதுமானது என்றிருக்க தரீக்கத்துச் சம்பந்தமான அறிவில் மட்டும் எல்லோரும் எவ்வாறு சமநிலையைப் பெற முடியும்?

அடுத்து ஷெய்கு ஹழ்ரத் ஷிப்லி ரஹிமஹுல்லாஹ் அவர்கள், நான் சுமார் 400 நல்லோர்களுக்கு பணிவிடை



செய்துள்ளேன். அவர்கள் அனைவரிடமிருந்தும் சுமார் 4000 நபிமொழிகளை கற்றிருக்கிறேன். இருந்தும் அவைகளிலிருந்து நான் ஒரேயொரு நபிமொழியை மட்டுமே தேர்ந்தெடுத்தேன். அந்த நபிமொழியில் அனைத்துமே உள்ளடக்கப்பட்டிருப்பதை கண்டு அதன்படி செயல்பட்டேன் என்கின்றனர். அந்த நபி மொழியானது,...

اعمل لدنياك بقدر مقامك فيها واعمل لآخرتك بقدر بقائك فيها

واعمل لله بقدر حاجتك اليه واعمل للنار بقدر صبرك عليها.

**"உலகில் உனது தகுதிக்குத் தக்கவாறு செயல்படு. சுவர்க் கத்தில் வாழ வேண்டும், அல்லாஹு தஆலாவை சந்திக்க வேண்டும், நரகிலிருந்து விடுதலை பெற வேண்டும் என விரும்பினால் அதற்கான ஆயத்தங்களை செய்துகொள்"**

ஹாத்திமுல் அஸம்மு என்னும் பெரியார் ஹழ்ரத் ஷகீகுல் பல்கீ ரஹிமஹுல்லாஹ் அவர்களின் சீடர்களில் ஒருவராகும். சுமார் 33 ஆண்டுகள் ஷெய்கவர்களின் தோழமையில் வாழ்ந்த ஒருவருமாகும். ஒருநாள் அவரது ஷெய்கவர்கள் அவரிடம், என்னைக் கொண்டு நீர் பெற்றுக்கொண்ட படிப்பினைகள் மற்றும் பிரயோஜனங்கள் என்னவென்று கேட்டபோது, அதற்கவர் பின்வருமாறு சொல்லத் துவங்கினார்,...

*(1)* இவ்வுலகில் ஒவ்வொருவரும் ஒருவரையொருவர் தோழமை கொள்கின்றனர். அவர்களில் எவரும் தமது தோழரோடு மண்ணறைக்கு உடன் செல்லக் கூடியவராக இல்லை. அதனால் என்னோடு இருக்கும் தோழரைப் பற்றி நான் யோசித்தேன். இதன்மூலம் வணக்கம் ஒன்றே தகுதியான தோழன் என்பதை கண்டு அதை தேர்ந்தெடுத்தேன்.

*(2)* இப்பூமியில் வாழும் ஜனங்களெல்லாம் தமது மனோ இச்சைகளுக்கு அடிமைப்பட்டவர்களாக இருக்கின்றனர். தனது இச்சைகளுக்கு மாற்றமாக செயல்படுவோரே அல்லாஹ்விடம் சிறந்தவர் என்னும் திருமறை வசனத்தை யோசித்தேன். இதில் அல்லாஹ்வின் சொல்லையே பிரதானமான ஒன்றென தேர்ந்தெ டுத்தேன். எனவே அழிந்துபோகும் இப்பூமியில் கிடைக்கும் சிற்றின்பங்களுக்காகவும் பட்டம் பதவிகளுக்காகவும் நான்

பின்வாங்கக் கூடாது. தான் சொன்னதுதான் சரி என்பதை நிரூபிப்பதற்காக பாமரர்களை பணயம் வைக்காதீர்கள். தன்னிடம் அறிவுள்ளது என்பதற்காக மற்றவர்களை மடைய ரென்று எண்ண வேண்டாம். ஒவ்வொருவரும் தத்தம் தமது கருத்துக்களை உண்மையானதென்றும் அதைத்தான் குர்ஆனும் ஹதீஸும் தெளிவுபடுத்துகிறதென்றும் பிரச்சாரம் செய்து அதற்கு வழிப்படாதவர்களை ஒதுக்கியும், குற்றங் குறை கூறியதும் தான் இன்று நாம் ஒற்றுமையற்று சிதறிக் கிடக்கிறோம். காபிர்க ளுக்கு முன் தனது சொந்த இஸ்லாமியச் சகோதரனை இழிவுபடுத் துவதை பெருமையாக நினைக்கத் துவங்கி விட்டோம்.

## ஷெய்குல் அக்பர் முஹ்யித்தீன் இப்னு அரபி

குத்வத்துல் அனும், உம்தத்துல் அஹ்காம், அந்நூருல் பஸீத், அல் பஹ்ருல் முஹீத், துல் மவாஹிபுல் இலாஹிய்யா, அல் அதாயல் குத்ஸிய்யா, முப்தித் தரீகைன், ஹுஜ்ஜத்துல் பரீகைன், சுல்தானுல் ஆரிபீன், புர்ஹானுல் முஹக்கிகீன், முஹ்யில் மில்லத்தி வத்தீன், ஷெய்குல் அக்பர் என்னும் பெயர்களால் அழைக்கப்பட்ட ஒரு மிகப்பெரும் ஞானியே அஷ்ஷெய்கு முஹ்யித்தீன் இப்னு அரபி ரழியல்லாஹு அன்ஹு அவர்களாகும்.

மொராக்கோ நாட்டை சார்ந்த அபூ மத்யன் என்று அழைக்கப் படும் அஷ்ஷெய்கு ஷுஐப் பின் ஹுஸைன் ரஹிமஹுல்லாஹ் என்பாரே பெரியார் அவர்களுக்கு ஷெய்குல் அக்பர் என்னும் சிறப்புப் பெயரை சூட்டியவராகும். பெரியார் அவர்கள் உந்து லுசில் இப்னு சுராகாவெனும் பெயரில் பிரபலமானவர்க ளுமாகும்.

இவர்கள் ரமழான் மாதம் 17ம் நாள் திங்கள் இரவு ஹிஜ்ரி 560ல் இஸ்பைன் நாட்டின் முர்ஸிய்யா என்னும் ஊரில் பிறந்து ரபீவுல்ஆகிர் 22ம் நாள் வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 638ல் இறையடி சேர்ந்து சிரியா நாட்டின் தலைநகரமான டமாஸ்கஸில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். இவர்களின் இறுதி ஊர்வலத்தில் அந்நாட்டு மக்களெல்லாம் கலந்து கொண்டது மட்டுமின்றி மூன்று நாட்கள் வரை அந்நகரமே வெறிச்சோடிக் கிடந்தது. இப்பெருமகனாரின் உடலமைப்பின் தோற்றத்தை



வர்ணிக்கும் பெரியோர்கள் நமது அருமை நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் முபாரக்கான தேக அமைப்பை கொண்டிருந்ததாகக் குறிப்பிடுகின்றனர். இன்னும் ஷெய்குல் அக்பர் அவர்கள் ஹழ்ரத் கௌஸுல் அஃழம் ரழியல் லாஹு அன்ஹு அவர்களின் ரூஹானிய்யத்தான பிள்ளை யென்றும் சொல்லப்படுகிறது.

## இவர்களை பற்றி அறிஞர்களின் கருத்துக்கள்

இமாம் பக்ருத்தீன் முஹம்மத் பின் உமர் பின் ஹுஸைனுர் ராஸி (பி : 25, ரமழானுல் முபாரக், 545. ம : ஷவ்வால் தலைப்பிறை, 606) இவர்கள் மிகவும் பிரசித்திப் பெற்ற தப்ஸீர் கலை ஆசிரி யராகும். இவர்கள் ஷெய்குல் அக்பர் அவர்களைப் புகழ்ந்து **'வலிய்யுன் அழீமுன்'** என்று பேசியுள்ளார்கள்.

ஷெய்கிஷ்ஷுயூக் ஷிஹாபுத்தீன் உமர் பின் முஹம்மத் அஸ்ஸுஹ்ரவர்தி (பி : 539, ம : 632) இவர்கள் ஷெய்குல் அக்பரை கரையில்லா கடலாக நான் கண்டேன் என்கின்றனர். இதுபோன்றே ஷெய்குல் அக்பரிடம் இவரைக் குறித்து வினவப் பட்ட போது, அவரை நான் ஸாலிஹான அடியாராகக் கண்டேன் எனக் கூறுகின்றனர்.

ஷெய்குல் முஹக்கிகுல் முதக்கிகு ஹழ்ரத் ஸஃதுத்தீன் பின் அல் முஅய்யித் அல் ஹுமவி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் சிரியாவுக்குப் பயணமாகி நாடு திரும்பிய பின்னர் மிக நெருக் கமான தோழர்கள், அந்நாட்டில் நீங்கள் பார்த்து வந்த பேரறிஞர் யாரென்று கேட்டபோது, அதற்கவர்கள்; ஆழம் தெரியாத கரையில்லாக் கடலாகிய ஷெய்குல் அக்பர் அவர்களை கண்டு வந்தேன் என்றனர்.

ஷாபிஃ மத்ஹபின் பேரறிஞர்களில் ஒருவரான காழி ஷம்ஸுத்தீன் அல் குவைனி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஷெய்குல் அக்பரின் பணிவிடையில் தம்மை ஒரு அடிமையைப் போல அர்ப்பணித்திருந்தார்கள். ஷெய்குல் அக்பரின் சபைக்குச் செல்லுமுன் தினந்தோறும் முப்பது திர்ஹங்கள் தர்மம் செய்து விட்டே செல்வார்களாம்.

மாலிக் மத்ஹபின் காழிகளில் ஒருவரான அல்லாமா ஸைனுத்தீன் அஸ்ஸவாவி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது புதல்வியை ஷெய்குல் அக்பர் நாயகம் அவர்களுக்கு மணம் செய்து கொடுத்ததோடு தாமும் அவர்களுக்கு பணிவிடை செய்து வந்தார்கள்.

ஹன்பலி மத்ஹபின் ஹதீத்கலை வல்லுனர்களில் முக்கிய மானவரான அஷ்ஷெய்கு அபூ அப்தில்லாஹ் அல் முகத்திஸி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஷெய்குல் அக்பர் நாயகத்தின் மிக நெருக்கமான தோழராக இருந்துள்ளார்கள். ஷெய்கவர்களின் திருச்சபைக்குதவருது வருகைதருபவராகவும் இருந்துள்ளார்கள்.

வரலாற்று ஆசிரியரும் முஹத்திதுமான ஹழ்ரத் முஹம்மத் ஸஃத் அத்தபீபி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஷெய்குல் அக்பர் அவர்களோடு பயணம் செய்ததாகவும் அப்போது அவர்களை மாபெரும் மனிதராகக் கண்டதாகவும் ஹாபிழ் அபூபக்ர் முஹம்மத் பின் கலப் ரஹிமஹுல்லாஹ் அவர்களிடமிருந்தும் ஹாபிழ் அபுல் காசிம் பின் பிஷக்வால் ரஹிமஹுல்லாஹ் அவர்களிடமிருந்தும் ஹதீதுகளை செவியேற்றதாகவும் என்னிடம் கூறியதாகவும் சொன்னர்கள்.

அல்லாமா அபூ யஹ்யா ஸகரிய்யா பின் முஹம்மத் பின் மஹ்மூத் அல் கஸ்வீனி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அஸ்பிலிய்யா என்னும் ஊரைப்பற்றி தமது **'ஆதாருல் பிலாதி வ அக்பாருல் உப்பாதி'** என்னும் நூலில், ஷெய்குல் அக்பரை சிரியாவில் ஹிஜ்ரி 630ல் கண்டதாகவும் அவர் ஒரு பல்கலை கழகம் என்றும் அவருக்கு நிகராக நான் யாரையும் அக்காலத்தில் காணவில்லை என்றும் குறிப்பிடுகிருர்கள். இவர்களனைவரும் ஷெய்குல் அக்பர் அவர்களை புகழ்ந்து பேசிய அவர்களின் காலத்தை சேர்ந்தவர்களில் குறிப்பிடத் தக்கவர்களாகும். இனி,...

## பிற்கால அறிஞர் பெருமக்கள்

ان الشيخ محي الدين كان كاملا فى العلوم الشرعية والحقيقية ولا يقدح فيه الا من لم يفهم كلامه ولم يؤمن به كما لا يقدح فى الانبيآء عليهم الصلاة والسلام نسبتهم الى الجنون والسحر



على لسان من لم يؤمن به.

"கண்ணியமிகு பரிசுத்தமான நபிமார்களை விசுவாசம் கொள்ளத் தயங்கியவர்கள் அந்த நபிமார்களை சூனியக்காரர்கள், பைத்தியக்காரர்கள் என்றெல்லாம் இழித்துரைத்தது போல அஷ்ஷெய்கு முஹ்யித்தீன் அவர்களது கருத்துக்களை புரிந்து கொள்ளத் தகுதியற்ருேரும், அவர்களை ஒரு பெரியாரென ஏற்க மறுப்போருமே அவர்கள் மீது குற்றம் காணுகின்றனர். அவர்கள் ஷரீஅத் மற்றும் ஹகீகத்துக்குரிய அறிவுகளில் பூரணத்துவம் அடைந்த ஒரு பெரியாராகும்" என்பது அஷ்ஷெய்கு குத்புத்தீன் ஷீராஸி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் கருத்தாகும்.

ஹிஜ்ரி 845ல் இறையடி சேர்ந்த அல்லாமா அல் இமாம் மக்ரீஸியுடையதும் ஹிஜ்ரி 855ல் இறையடி சேர்ந்திட்ட அல்லாமா பத்ருத்தீன் அல் ஐனீ போன்ற பெருமக்களின் மாணவரும் அல்லாமா இப்னு ஹஜர் அல் அஸ்கலானீ போன்ற பெருமக்களிடம் பல கல்விகளை திரட்டியவரும் பிரபல வரலாற்ருசிரியருமான அபுல் மஹாஸின் (மறைவு 812) அவர்கள் 'அந்நுஜூமுஸ் ஸாஹிரா' என்னும் தமது நூலின் 6-301ல் ஷெய்குல் அக்பரை பற்றி பேசும்போது 'கான இமாமன் ஃபீ உலூமில் ஹகாயிகி' என்று குறிப்பிடுகிருர்.

இவ்வாறே இமாம் தஹபி அவர்கள் (தில்க உம்மத்துன் கத் கலத்) என்று கூறுகிருர். ஹாபிழ் இப்னு ஹஜர் அஸ்கலானி, ஹாபிழ் இப்னு ஹஜர் ஹைத்தமி, இமாம் யூசுபுந் நபஹானி, அல்லாமா கமாலுத்தீன் பின் அல் ஹுமாம், அல்லாமா இப்னு ஆபிதீன், அல்லாமா அப்துல் கனி நாபில்ஸி, அஷ்ஷெய்கு அப்துல்காதிர் ஈஸா, அல்லாமா அப்துல் அஸீஸ் தப்பாக், அஸ்ஸெய்யிது அஹ்மத் பின் முபாரக், (அல் இப்ரீஸ் ஆசிரியர்) அல்லாமா இப்னு அஜீபா, ஷெய்குல் இஸ்லாம் ஷம்ஸுத்தீன் ரமலி, ஹாபிழ் சகாவி, அஷ்ஷெய்கு அபூ மத்யன், அஷ்ஷெய்கு தாஜுத்தீன் பின் அதாவுல்லாஹ், அஷ்ஷெய்கு அப்துல் கரீம் கஸ்னஸானி, அல்லாமா ஷஃருனி, அல்லாமா ஸருக், அல்லாமா பைருஸாபாதி ரழியல்லாஹு அன்ஹும் அஜ்மயீன் போன்ற பெரியார்களெல்லாம் ஷெய்குல் அக்பரை புகழ்ந்து பேசிய பிற்கால அறிஞர் பெரு மக்களாகும்.

அல்லாமா இமாம் சுயூத்தி ரஹிமஹுல்லாஹ் அவர்களிடம் இப்னு அரபி ரஹிமஹுல்லாஹ் அவர்களைப் பற்றி என்ன

கூறுகிறீர்களென்றும், இவ்வாறே இப்னு அரபியின் நூல்களையெல்லாம் எரிக்க வேண்டுமென்றும், அவர் ஒரு யூத கிறிஸ்தவர்களை விட மோசமான காபிராகும் என்றெல்லாம் கூறியவர்கள் பற்றியும் தங்களின் கருத்தென்ன என்று கேட்கப்பட்ட போது, அதற்கவர்கள் தந்த பதிலின் சுருக்கத்தை உங்களின் பார்வைக்கு தருகிறோம். அதாவது,...

இப்னு அரபியுடைய விஷயத்தில் அறிஞர் பெருமக்கள் ஒருங்கிணைந்த கருத்துடையோராக அன்றும் இருந்ததில்லை. இன்றும் இருந்ததில்லை. அவர் ஒரு ஞானியென்று சொல்ல சிலர் இருப்பதைப் போன்று (இக்கருத்து தான் உண்மையாகும்) பல மார்க்கச் சட்ட வல்லுனர்கள் அவரொரு வழிகேடர் என்றும் கூறுகின்றனர். இத்தகையோர் உலகாதாயத்திற்காக மார்க்கத்தின் ஒரு பகுதியோடு நின்று விட்டவர்களாகும். இவர்களின் இதயங்களை அல்லாஹ் திரையிட்டு விட்டான். இன்னும் சிலர் அவர்களின் விஷயத்தில் மௌனம் சாதிக்கின்றனர். அதேநேரம் அவர்களது விஷயத்தில் எனது உயர்வான கருத்து என்னவெனில் அவர் ஒரு வலியாகும் என்று கூறுகின்றனர்.

அஷ்ஷெய்கு அப்துல் குத்தூஸ் கங்கோஹி (ம : 944) அஷ்ஷெய்கு அப்துர் ரஸ்ஸாக் அல் ஜின்ஜானவி (ம : 949) அஷ்ஷெய்கு அப்துல் அஸீஸ் (ம : 975) அஷ்ஷெய்கு முஹம்மத் பின் பழ்லுல்லாஹ் புர்ஹான்பூரி (ம : 1029) அஷ்ஷெய்கு முஹிப்புல்லாஹ் இலாஹாபாதி (ம : 1058) அஷ்ஷெய்கு முஹம்மத் ஹுஸைன் இலாஹாபாதி (ம : 1322) போன்றோர் இந்திய தேசத்தில் இப்னு அரபியாகவும் இப்னு பாரிழாகவும் திகழ்ந்தோராகும். இந்த அறிஞர்களனைவரும் ஷெய்குல் அக்பருடைய நூல்களை சராசரி உலமாக்கள் பார்வையிடக் கூடாதெனத் தடுத்திருப்பதோடு அவைகளில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களை எந்த சந்தர்ப்பத்திலும் பாமரர்களுக்கு சொல்லக் கூடாதென்றும் கடுமையாக எச்சரித்தவர்களாகும்.

**"சுன்னத்தை முழுமையாக பின்பற்றி உள்ளத்தின் அக நோய்களை கண்டறிந்து அதனோடு போர் புரிந்து வெற்றிகண்ட பேரறிஞராகவும் ஸாஹிதாகவும் இருந்தவரே ஷெய்குல் அக்பராகும்"** என்பதாக அபுல் ஹஸன் நத்வி என்பார் தமது தாரீகே த:வத்தோ வ அஸீமத் என்னும் நூலின் 4-269ல் குறிப்பிடுகிறார். இதுபோன்றே வஹ்தத்துல் உஜூதைப் பற்றிய



கருத்துக்களை ஷெய்குல் அக்பருக்குப் பின்வாழ்ந்த சூபிய்யாக்களில் 99 சதவிகிதத்தினர் (அவர்களின் கருத்துக்களை தவறாகப் புரிந்து வழி கெடாதிருக்க) தெளிவுபடுத்தக் கூடியவர்களாக இருந்ததாகவும் மேற்கண்ட நூலின் 4-174ல் குறிப்பிடுகிறார்.

சூபிய்யாக்களுடைய நூல்களில் அவர்களால் சொல்லப்படாத கருத்துக்கள் இடை செருகலாக திணிக்கப்பட்டதைப் போல ஷெய்குல் அக்பரை காபிரென்று சொன்ன இப்னு தைமிய்யாவையும் நல்லோர்கள் எதிர்க்காமல் இல்லை. அதே நேரம் ஷெய்குல் அக்பரை குறித்து இப்னு தைமிய்யாவால் சொன்னதாக சொல்லப்படும் கருத்துக்கள் அவர்மீது இட்டுக் கட்டப்பட்ட வீண் பழியாகும் என நத்வியவர்கள் மேற்படி நூலின் 4-282ல் குறிப்பிடுகிறார்.

இதுபற்றி அவரது சிஷ்யர்களில் மிக மிக முக்கியமானவராகப் பேசப்படும் இப்னு கையிம் அல் ஜௌஸி என்பார், இப்னு அரபியுடைய விஷயத்தில் இப்னு தைமிய்யாவால் சொல்லப்பட்ட பல பத்வாக்கள் உள்ளன. பின்னர் அதற்காக அவர் தௌபா செய்தார். ஷெய்குல் அக்பர் ஹுலூல் மற்றும் இத்திஹாதுடைய கருத்துக்களை சொல்வதாக தம்மிடம் தரப்பட்ட தகவல்கள் பொய்யானது என்பதை அவர் புரிந்து கொண்டிருந்திருக்க வேண்டும். அல்லது அக்கருத்துக்களுக்கான உண்மை விளக்கத்தை அவர் விளங்கியிருக்க வேண்டும் என்று சொன்னதாக தஹ்கீகுல் ஹக் என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. நான் துவக்கத்தில் இப்னு அரபியின் மீது நல்ல எண்ணம் உடையவனாகவும் அவரை கண்ணியப்படுத்துபவனாகவும் அவரது புதூஹாத்துல் மக்கிய்யா, அல் முஹ்கமுல் மர்பூத், அத்துர்ரத்துல் ஃபாகிரா, மதாலிவுந் நுஜூம் போன்ற நூல்களில் பல நல்ல விஷயங்களை கண்டிருக்கிறேன் என்றும் இப்னு தைமிய்யா தமது பதாவா 2-464ல் குறிப்பிடுகிறார். ஷெய்குல் அக்பர் அவர்களால் சொல்லப்படாத தவறான ஹுலூல் மற்றும் இத்திஹாதுடைய கருத்துக்களை சொல்வதாக தகவல் தரப்பட்ட பின்னரே அவர்களை இவர் இழித்துப் பேசியிருக்கலாம் என்பதை இங்கே அவரது கருத்து தெளிவுபடுத்துவதை நாம் புரிந்து கொள்கிறோம்.

இதுபோன்றே அல் ஹபீப் அப்துல்லாஹ் பின் அலவிய்யில் ஹத்தாதி ரஹிமஹுல்லாஹ் என்பார் அந் நபாயிஸுல்

உல்விய்யா பில் மஸாயிலிஸ் ஸூ.:பிய்யா என்னும் நூலின் 187ம் பக்கத்தில், ''**வஷ்ஷெய்கு மின் அஹ்லில் அக்தாமிர் ராஸிகத்தி .:பில் உலூமி வல் மஆரிபி வத்தக்வா லில்லாஹி வஸ்ஸுஹ்தி பித்துன்யா**'' என்பதாக ஷெய்குல் அக்பர் அவர்களை புகழ்ந்து பேசுகிறார்கள். இவர் எமன் தேசத்திலுள்ள முஸ்தபவிய்யா என்னும் அரபிக் கலாசாலையின் விரிவுரையாளரான அஸ்ஸெய்யித் உமர் ஹபீப் என்பாரின் முன்னோராகும்.

## தற்கால அறிஞர்கள்

தற்காலத்தில் இஸ்லாமிய அரங்கிலே வஹ்ஹாபிஸத்தை மிகக் கடுமையாக எதிர்ப்போரில் அஷ்ஷெய்கு அப்துல்லாஹ் அல் ஹிரரி, அப்துல்லாஹ் அல் குமாரி,சித்தீக் அல் குமாரி, ஈஸா பின் மானி.'. அல் ஹிம்யரி, மஹ்மூத் ஸயீத் மம்தூஹ், மஹ்மூத் குராப், அஸ்ஸெய்யித் ஹாஷிம் அர்ரிபாயி, அஸ்ஸெய்யித் அஹ்மத் அப்துல்லாஹ் அர்ரிபாயி, அஷ்ஷெய்கு யூசுப் கத்தார் முஹம்மத், அஸ்ஸெய்யித் முஹம்மத் அலவி அல் மாலிகி, அஸ்ஸெய்யித் அஹ்மத் அல் கத்ஆனி, முஹம்மத் ஸாஹித் கௌஸரி, அஷ்ஷெய்கு அப்துல் அஸீஸில் குமாரி, அஹ்மத் அல் அர்நாவூத், கலாநிதி முஹம்மத் ஸயீத் ரமழான் பூத்தி, கலாநிதி ஹஸனுல் பாதிஹ் கரீபுல்லாஹ், தாஹா அப்துல் பாகி சுரூர், அஷ்ஷெய்கு இப்ராஹீம் சாமர்ராயீ, அஷ்ஷெய்கு அப்துல்லாஹ் பின் அத்தலீதி தவ்வலல்லாஹு ஹயாத்தஹு வ ஹயாத்தஹும் போன்றோரும் இன்னும் பலரும் ஷெய்குல் அக்பரை புகழ்ந்து பேசுபவர்களாகவே உள்ளனர். ஷீஆக்கள் வஹ்ஹாபிஸத்தை எதிர்க்கின்றனர் என்ற ஒரே காரணத்திற்காக ஷீஆக்களை எதிர்க்க வேண்டிய அவசியமில்லை என நினைப்பவர்களும் தரீக்காக்களின் வழி நடத்துனர்களாக இருப்போரும் இவர்களுக்கு என்ன பதில் சொல்லப் போகின்றனர்? இவர்களில் சிலர் சில விஷயங்களில் தவறான போக்கை கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆதலால் ஷெய்குல் அக்பர் அவர்கள் குப்ரிய்யத்தான விஷயங்களை சொல்லவில்லை என்பதற்கு இன்னுமா ஆதாரம் வேண்டும்!

அப்படியானால் இமாம் தஹபி என்பார் என்ன கூறுகிறார் என்பதை பாருங்கள்! இமாம் தஹபி அவர்கள் '**அல் இபர் பீ கபரி மன் கபர்**' என்னும் நூலில் ஷெய்குல் அக்பர் அவர்களை 'குத்வத்துல் வாயிழீன பி வஹ்தத்தில் உஜூதி' என்று புகழ்ந்து பேசுகிறார். இந்நிலையில் தஹபி அவர்கள் வஹ்தத்துல் உஜூதுடைய கொள்கையை ஏற்றுக் கொள்பவர் என்பது தெரிய வருவதால் ஹதீதுகளை ஜர்ஹ் த.'.தீல் செய்வோர் எச்சரிக்கையாக இருப்பார்களாக.



## சுல்தானுல் உலமா, ஹாபிழ் சுப்கி, அஷ்ஷெய்கு சிராஜுத்தீனுல் புல்கீனி போன்ற பலரது மறுப்பும் அதற்கான பதிலும்

உலமாக்களின் அரசரெனப் போற்றப்படும் அல்லாமா இஸ்ஸுத்தீன் பின் அப்திஸ்ஸலாம் ரஹிமஹுல்லாஹ் (பி: 577. ம: 660) அவர்களின் சபையில் நிகழ்ந்த சம்பவமொன்றை அவர்களது பணியாளர் சொன்னதாக நம்பிக்கைக்குரிய அறிவிப்பாளர்கள் வாயிலாக பதிவாகியுள்ள தகவல் என்னவெனில்,...

''நாங்கள் ஒருநாள் இமாமவர்களின் வகுப்பில் அமர்ந்திருந்தோம். அப்போது ரித்தத் - மதம் மாறுதல் சம்பந்தமான பாடம் வாசிக்கப்பட்டது. அதில் ஸிந்தீக் என்னும் வாக்கியம் வந்தபோது அது அரபிமொழி சொல்லா? அல்லது பார்ஸி மொழி சொல்லா? என்னும் கருத்து வேறுபாடு ஏற்பட, சிலர் அரபிச்சொல் என்றும் வேறுசிலர் பார்ஸிச்சொல் என்றும் கூறினர். குப்ரை மறைத்துக் கொண்டு ஈமானை வெளிப்படுத்தும் ஒருவனுக்கு ஸிந்தீக் என்று சொல்லப்பட்டதை போன்று இச்சொல்லுக்கு யாரை உதாரணமாக சொல்லலாமென மாணவர் ஒருவர் கேட்க, இமாமவர்களின் அருகே அமர்ந்திருந்த ஒருவர் முஹ்யித்தீன் இப்னு அரபியை சொல்லலாம் என்று சொன்னார். அப்போது இமாமவர்கள் ஒன்றுமே பேசவில்லை.

பணியாளர் கூறுகிறார். அன்று இமாமவர்கள் நோன்பு நோற்றிருந்தனர். நோன்பு திறக்கும் நேரம் நெருங்கிய போது, இக்காலத்தில் கௌதாக இருப்பவர் யாரென்று நான் கேட்க, அதற்கு இமாமவர்கள்; ஷெய்குல் அக்பர் என்றனர். அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டுப் போன நான் மௌனமாகி விட்டேன். அப்போது இமாமவர்கள் என்னை நோக்கி, ஏன் ஆச்சரியப்படுகிறீர்? அது புகஹாக்களின் சபை. அங்கே மௌனம் சாதிப்பதை தவிர வேறு வழியில்லை என்று கூறினர்''

உலமாக்களுக்கெல்லாம் சக்ரவர்த்தியான இமாமவர்கள்

துவக்க காலத்தில் ஷெய்குல் அக்பர் அவர்களை தூற்றியதாகவும் பின்னர் குத்பு எனப் புகழ்ந்ததாகவும் இமாம் மனவி ரஹிமஹுமுல் லாஹ் அவர்கள் கூறியதாக 'ஷதராத்துத் தஹப்' என்னும் நூலின் 5-193ல் கூறப்பட்டுள்ளது. இதே விஷயம் பல நூல்களிலும் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் இமாமவர்கள் ஷெய்குல் அக்பர் அவர்களை ஸிந்திக் எனக் கூறியதாக சொல்லப்படுவது பொய்யா னதொரு குற்றச்சாட்டாகும் என்பதாக இமாம் ஷஃரானி ரஹிமஹுமுல்லாஹ் அவர்கள் கூறிய போதிலும் இமாமவர்களின் சபையில் ஷெய்குல் அக்பர் அவர்களை அவர்களுக்கு அருகிலி ருந்தவர் ஸிந்தீக் எனக் கூறியபோது இமாமவர்கள் மௌனமாக இருந்ததையும் குறிப்பிடத் தவறவில்லை.

இதையெல்லாம் சில பெருமக்கள் வீணாக இட்டுக் கட்டப் பட்டதென்று சொன்னாலும் கூட வேறுசிலர் அதற்கு விளக்கமும் தருகின்றனர். அனைவரும் ஒருங்கிணைந்து ஒரு கருத்தை முன் வைக்காததால் நாமும் அக்கருத்தை மறுத்து ஒதுக்கிவிட முடியாது. மேலும் ஹாபிழ் சுப்கி அவர்களும் துவக்கத்தில் ஷெய்குல் அக்பர் அவர்களை நிராகரித்து விட்டு பின்னர் '**கானஷ் ஷெய்கு முஹ்யித்தீன் ஆயத்தன் மின் ஆயாத்தில்லாஹ்**' எனப் புகழ்ந்து பேசியிருக்கிறார். இதேபோல அஷ்ஷெய்கு ஸிராஜுத்தீன் புல்கீனி அவர்களும் துவக்கத்தில் எதிர்த்தவர் தான். பின்னர் ஷெய்குல் அக்பர் அவர்கள் மிகப்பெரும் புனிதராகும் என்றும் அவர்கள் குர்ஆன் ஹதீத் என்னும் சமுத்தி ரத்தில் மூழ்கியவர்களாகும். அவர்களுடைய கருத்துக்களை புரிந்து கொள்ளும் ஆற்றலற்ற குருடர்களே அவர்களை நிராகரிக்கின்றனர் என்றும் சொன்னவர் தான்.

இதன்றி குதுபுஸ் ஸமான் எனப் போற்றப்படும் மற்றுமோர் பெருமகனார் அல்லாமா இப்னு அஸ்அதுல் யாபிஃ ரஹிமஹுமுல் லாஹ் அவர்களாகும். இவர்கள் ஷெய்குல் அக்பருடைய விஷயத்தில் மௌனமே எனது தீர்ப்பாகும் என்பதாக ரௌழுர் ரயாஹீன் என்னும் நூலின் பக்கம் 388ல் கூறுகின்றனர்.

இன்னும் அல்லாமா யாபிஃ ரஹிமஹுமுல்லாஹ் அவர்கள் அதே நூலின் அதே பக்கத்தில் ஆழமான அறிவைப் பெற்ற அயிம்மாக்கள் மிகத்தகுதி வாய்ந்த உலமாக்கள் கஷ்புடைய ரப்பானிய்யத்தான உள்ளமுடைய ஞானிகளான ஷெய்கு மார்களின் கொள்கை விளக்கம் எனத் தலைப்பிட்டு மார்க்கக்



கொள்கை விளக்கத்தை பேசும்போது, ஷெய்குல் அக்பர் அவர்களுடைய விளக்கத்தை எடுத்துக்காட்ட வில்லை. ஆனால் அந்த நூலுக்குரிய விளக்கவுரையில் ஷெய்குல் அக்பர் அவர்கள் மாபெரும் விலாயத்துடையவர் எனக் கூறியுள்ளதாக அஷ் ஷெய்கு ஸகரிய்யா என்பார் கூறுகின்றனர்.

இவ்வாறே ஹாபிழ் தஹபி என்பாரும் மௌனமே எனது கொள்கையாகும் என்றவர், பிறகு அவர்களை தவறாகப் பேசுவோரே தவறானவர் என்று கூறுகிறார். ஆக மேற்காணும் அறிஞர் பெருமக்களின் கருத்துக்கள் நமக்குத் தரும் பாடம் என்னவெனில் ஷெய்குல் அக்பர் அவர்களின் கருத்துக்களை அல்லாஹ்வின் நல்லடியார்களான சூபிய்யாக்களின் தோழமை இன்றி ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாது என்பதேயாகும். ஆதலால் ஷெய்குல் அக்பர் அவர்கள் மாபெரும் விலாயத்து டையவர்கள் தானென்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. இவ்வாறே பின்னர் ஹாபிழ் முக்ரி, முல்லா அலிய்யுல் காரி போன்றோரும் ஷெய்குல் அக்பர் அவர்களைப் பற்றிய தவறான கருத்திலிருந்து தம்மை கண்டிப்பாக நீக்கிக் கொண்டிருக்க வேண்டும்.

பல அறிஞர்களால் தூற்றப்படும் இப்னு தைமிய்யா போன் றவரே ஷெய்குல் அக்பரை பற்றி பேசிய கருத்துக்களிலிருந்து பின்னர் வாபஸாகிறார் எனில் இப்பெருமக்கள் இவரைவிட எதிலும் குறைந்தவர்களல்ல. இத்தனை ஏன்! முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் என்பார் ஷெய்குல் அக்பர் மற்றும் இப்னுல் பாரிழ் போன்றோரை தாம் காபிரென்று சொன்னதாக சொல்லப் படுவது தன்மீது இட்டுக்கட்டப்பட்ட பழியாகும் என அவரே எழுதுகிறார். இதனை அஸ்ஸெய்யித் முஹம்மத் அலவிய்யுல் மாலிகி என்பார் தமது 'மபாஹீம்' என்னும் நூலின் 17வது பக்கத்தில் குறிப்பிடுகிறார்.எனவே மேற்கண்ட அறிஞர் பெருமக்கள் தமது தவறான கருத்துக்களிலிருந்து மீண்டதற் குரிய சான்றுகள் இல்லையென்ற போதிலும் நாம் ஒப்புக்கொண்டு தானாக வேண்டும். அவ்வாறு இல்லையேல் அடுத்து வரும் செய்திக்கு நீங்கள் என்ன பதில் சொல்வீர்கள்? அதாவது,...

ஞானவான்களின் இமாமமென போற்றப்படும் அஷ்ஷெய்கு அபுல் ஹஸன் அஷ்ஷாதுலி நாயகம் (பி:593. ம:656) ரஹிமஹுமுல்லாஹ் அவர்களிடம், மார்க்கத்தின் சட்டமேதை ஒருவர் ஷெய்குல் அக்பரை பற்றி வினவியபோது, அதற்க